# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-11 • Volume-11 • இதழ்-8 • Issue-8 • ஜீன்-2026 • June -2026 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV E_Book: www.policeparvai.com




## பெண்கள் பாதுகாப்பு, போதைபொருள் ஒழிப்புக்காக தனி கவனம் செலுத்தப்படும்

DGP மகேஷ் குமார் அகர்வால் IPS

## கர்னல் சங்க்ராம் சிங்கின் அர்ப்பணிப்பு





## உச்ச நீதிமன்ற புதிய நீதிபதியாக

திருமதி.வெங்கிட சுப்பிரமணி மோகனா அவர்கள்

முதல்வர் ஜோசப் விஜய் வாழ்த்து!





## சாலையில் கிடந்த ரூ.5.64 லட்சத்தை ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுனர் மதன்

DC திருமதி. தீபா சத்யன் IPS அவர்கள் பாராட்டு

உடல் நலம் காக்கும் அருமருந்து கடுக்காய்



www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



சிம்மன், கன்னி, துலாம் மற்றும் விருச்சிகம் ராசியினருக்கு ஸ்பெஷல்




EMPIRE
together to grow!

இந்த பரபரப்பான நவீன உலகத்தில் கெமிக்கல் நிறைந்த உணவுகள், சத்து இல்லா உணவுகள், மரபணு மாற்றம் செய்யப்பட்ட விவசாயத்தால் விளைந்த பொருட்கள் முதலியவற்றால் மனிதனுக்கு ஊட்டச்சத்து குறைபாடு இருப்பதும் அதற்காக துணை உணவுகளை நாம் அன்றாடம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் உலகம் அறிந்த உண்மை. ஆகவே நாங்கள் அதுபோன்ற நல்ல, மக்களுக்கு தேவையான எளிதில் கிடைக்காத இயற்கை பொருட்களை அறிமுகப்படுத்த களம் இறங்கியுள்ளோம்.

மூலிகை மற்றும் வேதிப்பொருட்கள் இல்லா துணை உணவுப்பொருட்கள் (HERBAL FOOD SUPPLEMENTARY & HEALTH CARE PRODUCTS), வேதிப்பொருட்கள் இல்லா கலப்படமற்ற உணவுப் பொருட்கள் (FOOD PRODUCTS), வீரியமான வேதிப்பொருட்கள் பயன்படுத்தபடாத மூலிகை அதிகம் அல்லது முழுவதும் சேர்க்கப்பட்ட சொந்த பயன்பாட்டு பெருட்கள் (PERSONAL CARE), அழகுசாதன (BEAUTY CARE) பொருட்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் (HOME CARE), சுற்றுசூழலை பாதிக்காத (ECO FRIENDLY) கைவினை பொருட்கள் (HAND CRAFT) போன்ற மனிதனுக்கும் மண்ணுக்கும் தீங்கு விளைவிக்காத பொருட்களை மட்டுமே எம்பயர் மார்க்கெட்டிங் செய்கிறது என்பதனை உறுதியுடனும் பெருமிதத்துடனும் தெரிவித்துகொள்கிறேன்.

Nr. **B.BHARATHIRAJ** *MCA.,*
Managing Director, EMPIRE



**97 89 49 1438 | 766 755 1542**

# போலீஸ் பார்வை

ஜூன் 2026   மலர் 11   இதழ் 8



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன், K.K.ஞானேஸ்வரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், K.பாபு I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன், J.ஜெயவேல்முருகன், N.முரளிதரன்

**சிறப்பு நிருபர்கள்** : V.Vivek Bomb, P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன், P.மணிமாறன், A.R.முருகேசன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், G.நந்தகுமார், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர்தீன், L.லூயில்பெர்ணான்டஸ், P.ராஜராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், S.ரவிச்சந்திரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார், R.நந்தகுமார், J.மணிகண்டன், S.வெங்கடேஷ், V.சுகுமாரன், K.பில்லர், R.சங்கர், Dr.J.காந்தியப்பன், S.ஜெயந்தி செல்வம், V.வேல்முருகன், S.தினேஷ்குமார், C.A.செந்தில்நாதன், S.பாஜி, G.முகமது அன்சாரி, முகமது தாவூத் ஹுசேன், K.ரஞ்சிதா, U.விவேகானந்த்



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only





## பாலியல் வன்கொடுமையை தடுக்க

# என்கவுன்டர் தான் ஒரே வழி

*தொடர்ச்சியாக நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் பெண்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக உள்ளது அதற்கு முக்கிய காரணம் போதைப்பொருள் புழக்கம்தான். கஞ்சாவும் மதுவும் சேர்த்து உபயோகப்படுத்தும் ஆசாமிகள் நடவடிக்கைகள் மிகவும் கொடூரமாக உள்ளது. மூதாட்டிகள், பெண்கள், பெண் குழந்தைகள் என அனைவரையும் போதை ஆசாமிகள் பாலியல் வன்கொடுமை செய்து சிலரை கொலையும் செய்து விடுகிறார்கள்.*

*இது போன்ற சம்பவங்கள் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக உள்ளது மேலும் பெண்கள், மாணவிகள், குழந்தைகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளதால் இதற்கு தீர்வு காண வெறும் போக்ஸோ வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்வது மட்டும் தீர்வாகாது.*

*போக்ஸோ வழக்கில் சிறை சென்று பின் ஜாமினில் வெளியே வரும் பாலியல் வன்கொடுமை குற்றவாளிகள் திரும்பவும் போதையில் பயமின்றி பாலியல் குற்றங்களில் ஈடுபடுகின்றனர். இதற்கு போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதும், பாலியல் குற்றவாளிகளை என்கவுண்டர் செய்வதும்தான் காவல்துறைக்கு இருக்கும் ஒரே வழி. அப்போதுதான் மரண பயத்தால் இது போன்ற ஈனச் செயலில் ஈடுபட மாட்டார்கள். மேலும், இதுவே கடும் நடவடிக்காக அமையும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.*

*என்கவுன்டரை தடுக்கும் மனித உரிமைகள் அமைப்பு இத்தகைய குற்றங்களில் பாதிக்கப்படும் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களை குறித்தும் அவர்களின் மனிதம் அழிக்கப்படுவது குறித்தும் பேசுவதேயில்லை.*

*அனைவரும் வாழ்வு பொதுவானது. மற்றவர்களை போதையில் துன்புறுத்த துணியும் இவர்கள் செயலை தொடர்ந்து எவ்வாறு காவல் துறையால் கண்காணிக்க முடியும். எத்தனை முறை தண்டனை பெற்றாலும் திருந்தாதவர்களை என்னதான் செய்வது.*

**ஆசிரியர்**

### இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...

'போலீஸ் பார்வை' மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.

# பெண்கள் பாதுகாப்பு, போதை பொருள் ஒழிப்புக்காக தனி கவனம் செலுத்தப்படும்

## DGP மகேஷ் குமார் அகர்வால் IPS



தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குனராக பொறுப்பேற்றுள்ள திரு.மகேஷ் குமார் அகர்வால் IPS அவர்கள் தமிழ்நாட்டில் பெண்கள் பெண் குழந்தைகள் மாணவிகள் பாதுகாப்பிற்கு முக்கிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மேலும் தமிழ்நாட்டில் கஞ்சா போதைப் பொருட்கள் மற்றும் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை போதைப் பொருட்கள் விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு சட்டம் ஒழுங்கு பாதுகாப்பிற்கு சவாலாக உள்ள போதைப்பொருள் புழக்கத்தை ஒழிக்க தமிழக முதலமைச்சரின் உத்தரவுப்படி தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் காவல் துறை மிக கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு செயல்பட வேண்டும் என அனைத்து மாவட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு DGP திரு.மகேஷ்குமார் அகர்வால் IPS அறிவுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

முதன்மை ஆசிரியர்: S.முருகானந்தம், சென்னை.




## விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| கலர் பின் அட்டை முழு பக்கம் | - | ரூ.20,000 |
| கலர் பின் அட்டை உள் பக்கம் | - | ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் முழு பக்கம் | - | ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் அரை பக்கம் | - | ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே முழு பக்கம் | - | ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே அரை பக்கம் | - | ரூ.6,000 |

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438



# மத்திய அமைச்சர் நிதின் கட்கரியிடம் தமிழக அரசு சார்பில் 10 கோரிக்கைகள்

## அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வேண்டுகோள்

தமிழ்நாடு முதல்வர் ச.ஜோசப் விஜய் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மத்தியசாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்களை சந்தித்து தமிழ்நாட்டின் நெடுஞ்சாலைத்துறை தொடர்பான முக்கிய கோரிக்கைகளை மாநில அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மாநில அரசு சார்பாக முன்வைத்தோம்.

சாலைப் பாதுகாப்பு கொள்கைகளைத் தமிழ்நாட்டில் முழுமையாக நடைமுறைப்படுத்தி விபத்துகளைக் குறைப்பது, முக்கிய உயர்மட்ட மேம்பாலங்களின் சீரமைப்பு மற்றும் நவீன திட்டமிடல்கள், தமிழ்நாடு முழுவதும் நான்கு வழிச் சாலைகளை ஆறுவழிச் சாலைகளாக விரிவாக்கம் செய்வது, 2026–27 ஆம் ஆண்டுக்கான சாலை மற்றும் உள்கட்டமைப்புகளுக்கான மத்திய அரசு நிதியினை விடுவிப்பது உட்பட பத்து முக்கியக் கோரிக்கைகளை வைத்தோம்.

தமிழ்நாட்டிற்குரிய சாலை மற்றும் உள்கட்டமைப்புகளுக்கான மத்திய அரசு நிதியினை அதிகரித்துக் கொடுப்பது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி அவர்கள். கடந்த ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 71,313 சாலை விபத்துகள் பதிவாகியுள்ளன. அதில், 18,421 சாலை விபத்து மரணங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையை வெகுவாக குறைக்கப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், நேர்மையான அரசு மற்றும் வெளிப்படையான நிர்வாகம் என்ற வழியில் நமது மாநிலத்தின் நெடுஞ்சாலைத்துறை திட்டங்கள் இதுவரை காணாத வளர்ச்சியை நோக்கி முன்னேறும். தமிழ்நாட்டின் சாலைகள், கட்டமைப்புகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆகியவை உலகத்தர அளவில் முன்னேற்ற மடையும்என தமிழ்நாடு அரசு சார்பாக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார்.

**துணை ஆசிரியர்: B.சம்பத், சென்னை.**



# கர்னல் சங்க்ராம் சிங்கின் அர்ப்பணிப்பு

கர்னல் சங்க்ராம் சிங் பட்டி. இந்திய ராணுவத்தில் பயம் என்றால் என்னவென்று அறியாத அதிகாரி. நமது நாட்டின் பாதுகாப்பு ஒன்றே அவரது வாழ்வின் கடமை என வாழ்ந்தவர். ராஜஸ்தான் ஜோத்பூரை சேர்ந்த இந்த வீரனின் கதையை இன்று உங்களுக்கு சொல்வதில் எனக்கு பெருமிதம்.

சவாலான ராணுவ செயல்பாடுகளில் துணிந்து இறங்கி வெற்றி கண்டவர் இவர். இதுவே இவரது வாழ்வு நம்மையும் நமது இளைஞர்களையும் வீறு கொண்டு எழ வைக்கும்.

சிக்கல் நிறைந்த உளவு போன்ற விஷயங்களில் அவர் ஈடுபட்டதுடன், பயங்கரவாதத்தை எதிர்த்து போராடினார்.

இது போன்ற செயல்பாடுகளுக்கு உடல் வலிமை மட்டும் அல்ல, எல்லையற்ற பொறுமை, நல்ல தீர்க்கமான புரிதலுடன் ஊகம் செய்து யுக்திகளை கையாள்வது, மன வலிமை என பல பல விஷயங்களை வளர்த்துக் கொள்ள வேண்டி இருக்கிறது.

கடுமையான பிரதேசங்களில் அபாயகரமான சூழலிலும், தனது நோக்கம், தனது அணியின் பாதுகாப்பு இது இரண்டையும் முன் நிறுத்துவார்.

கர்னல் சங்க்ராம் சிங் பட்டியின் உளவு பிரிவு பணிகள் நமது இந்திய எல்லைகளை காத்து நின்றன. நம் கண்ணுக்கு புலப்படாத இது போன்ற வர்கள் பங்களிப்பு ஏராளம். அதிக முக்கியத்துவம் வாய்ந்த பணியும் கூட.

எந்த செயல்பாட்டுக்கும் தியாகத்துக்கும் அருகில் கை தட்டி ஊக்குவிக்க யாருமே இருக்க மாட்டார்கள். எந்த இணைய தளத்திலும் வெளிவராது. போஸ்ட்டும் கிடையாது. வைரல் கண்டென்ட் கிடையாது.

இதுவல்லவோ அர்ப்பணிப்பு..

இந்த கர்னல் போல எண்ணற்ற வீரர்களின் உழைப்பும் தியாகமுமே நமது பாரதப் படையின் பெருமை, வீரம், ஒழுக்கம், சுயநலம் இல்லாத பணி இவற்றை அடையாளப் படுத்துகின்றன.



# விபத்தில் பலியான பெண் உடல் நல்லடக்கம்

## சமூக செயல்பாட்டாளர் விஜயகுமாரின் நற்செயலுக்கு பாராட்டு

திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி கூத்தூர் பிரதான சாலையில் சுமார் 65 வயது மதிக்கத்தக்க பெயர் விலாசம் தெரியாத பெண் ஒருவர் நடந்து வந்து கொண்டிருந்தபோது, அதே சாலையில் அதே திசையில் அவருக்கு பின்னால் வந்த வாகனம் மோதியதில் அவருக்கு தலை மற்றும் உடம்பில் காயம் ஏற்பட்டது.

அவரின் உயிர்காக்க 108 ஆம்புலன்ஸ் மூலம் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டார்.

விபத்து தொடர்பாக கொள்ளிடம் காவல் நிலைய காவலர்கள் வழக்குப்பதிந்து விசாரித்து வருகிறார்கள். வாகன விபத்தில் பலியான பெண் உடற்கூராய்வு செய்யப்பட்டது. உடற்கூராய்வு செய்யப்பட்ட உடலை யாரும் உரிமை கோரவில்லை.

உரிமை கோரப்படாத உடலை நல்லடக்கம் செய்வதற்காக திருச்சியில் ஆதரவற்ற அனாதை பிணங்களை நல்லடக்கம் செய்து வரும் அமிர்தம் சமூக சேவை அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் யோகா ஆசிரியர் விஜயகுமாருக்கு கொள்ளிடம் காவல் நிலைய முதல் நிலை காவலர் மரகதம் தகவல் அளித்தார்.

தகவலின் அடிப்படையில் திருச்சி தென்னூர் அண்ணாநகர் குழுமிக்கரை மயானத்தில் சரக காவல்நிலைய காவலர் முன்னிலையில் உரிமை கோரப்படாத உடலுக்கு உரிய மரியாதையுடன் இறுதி சடங்கு செய்து அமிர்தம் சமூக சேவை அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் யோகா ஆசிரியர் விஜயகுமார் நல்லடக்கம் செய்தார் என்பது பாராட்டுக்குரியது.

# சிம்மம், கன்னி, துலாம் மற்றும் விருச்சிகம் ராசிக்காரர்களுக்கு..

**சிம்ம ராசி அன்பர்களே!**

யாரிடமும் உடனுக்குடன் நட்பு பாராட்ட தெரியாதவர் நீங்கள். உத்யோகதர்களுக்கு வேலைக்குச் செல்லும் உத்யோகஸ்தர்களுக்கு தங்கள் மேலதிகாரிகளின் அன்பை பெற தாங்கள் குறித்த நேரத்தில் உங்கள் பணிகளை முடித்துக் காட்டினீர்கள் என்றால் அவர்கள் நட்பை பெற இயலும். வியாபாரிகள் வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் தங்களின் வியாபாரத்தை விரிவு செய்வதற்காக பயணங்கள் மேற்கொள்வர். இதனால் தங்கள் வியாபாரம் மற்ற ஊர்களிலும் செழித்து வளர இந்த பயணங்கள் சாதகமாக இருக்கும்.

குடும்பத்தலைவிகள் தங்கள் உழைப்பிற்கு வீட்டில் அங்கீகாரம் தரவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இனி வீட்டில் மதிப்பு அளிப்பர். கணவரது தேவையை பூர்த்தி செய்வீர்கள். கலைஞர்கள் பட வாய்ப்புகள் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்கள் எந்த கதாபாத்திரமாகஅதனை ஏற்று நடியுங்கள். பின்பு அதுவே, பெரிய வாய்ப்பினைப் பெற்றுத் தரும்.

பரிகாரம்: சிவ பெருமாளை ஞாயிற்றுகிழமை அன்று ராகுகாலத்தில் தரிசிப்பது நல்லது.

**கன்னி ராசி அன்பர்களே!**

தொழில் செய்யும் திறன் மிக்கவர் நீங்கள். உழைப்பதற்கு அஞ்சாதவர்.உத்யோகஸ்தர் களுக்கு அலுவலகத்தில் சக ஊழியர்கள் தங்கள் வேலையை பகிர்ந்து கொண்டு தங்களின் பேரன்பை பெறுவர்.

வியாபாரம் செய்யும் இளைஞர்களுக்கு அடிக்கடி குறுகிய தூர பயணங்களை மேற்கொள்வீர்கள். முதலில் செலவுகள்அதிகமாக இருந்தாலும் தங்களுக்கு இனி வருங்காலத்தில் அது ஒரு அடித்தளமாக அமைந்துவிடும்.

குடும்பத் தலைவிகளுக்கு பலகாலமாக கற்பனை செய்து வைத்துக் கொண்டிருந்த வீடு கட்டும் பணி நிறைவேறும். குடும்பத் தலைவி தங்கள் கணவரின் அன்பைப் பரிபூரணமாகப் பெற்று மனமகிழ்வு கொள்வீர்கள்.

கலைஞர்களுக்கு பல காலமாக தாங்கள் பட வாய்ப்புக்காக அலைந்து திரிந்தீர்கள். அதன் வெளிப்பாடு தங்களுக்கு நல்ல நல்ல கதாபாத்திரம் கிடைக்கும். மாணவ மாணவிகள் தங்களது சகமாணவர்களுடன் இணக்கமாக செல்வது நல்லது. தேவையற்ற வாக்குவாதத்தில் கலந்து கொள்ள வேண்டும். படிப்பில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.

பரிகாரம்: திருவேற்காடு மாரியம்மனை வெள்ளிக்கிழமை அன்று தரிசிப்பது நல்லது.

**துலா ராசி அன்பர்களே!**

தராசு போன்று நேர்மை யானவர் நீங்கள். யாருக்காகவும் பரிந்து கொள்ளமாட்டீர்கள்.

உத்யோகஸ்தர்களுக்கு சக பணியாளர்களிடம் அனுசரித்துச் செல்வதாலும் மற்றும் தங்கள் கடமையை சரிவர செய்வதாலும் தங்கள் மேலதிகாரிகள் தங்களிடம் நெருக்கமாவர்.

வியாபாரத்திற்காக வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு, தாங்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்ய அதிகமான ஆர்டர்கள் கிடைக்கும். அதனை குறித்த நேரத்தில் தாங்கள் அனுப்பி வைத்துவிடுவீர்கள். குடும்பத் தலைவிகள் சுய உதவி குழுவில் இணைந்து விடுவர். அதில் புதிய சலுகைகளை பெறுவீர்கள். வீட்டினைகலைப் பொருட்களை கொண்டு அலங்கரிப்பீர்கள். கலைஞர்களுக்கு லொகேஷன் பார்ப்பதற்காக வெளியூர் பயணங்கள் மேற்கொள்வீர்கள். மற்ற மற்ற கதாபாத்திரம் தேர்வு செய்வது இந்த மாதம் நடைபெறும். மாணவர்கள் எப்போதும் தாங்கள் எதிர்பாலினரிடத்தில் அதிக நெருக்கமாக பழக வேண்டாம். அது தங்களை பாதிக்கும்.

தங்கள் எதிர்கால இலக்கை மட்டும் கவனத்தில் வைத்துக் கொள்வது நல்லது.

பரிகாரம்: லஷ்மி நரசிம்மருக்கு சனிக்கிழமை துளசி மாலை சாற்றுவது.



**விருச்சிகம்**

வெளியே பார்ப்பதற்கு தேள் போன்று இருந்தாலும் உண்மையில் நீங்கள் ஒரு குழந்தையே. உத்யோகஸ்தர்களுக்கு தங்கள் குடும்ப வருவாய் பெருகும் காலமிது. தாங்கள் நினைத்தவாறே விரும்பிய இடத்தில் தங்களுக்கு இடமாற்றத்துடன் சம்பள உயர்வும் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு; ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கோபப்படாதீர்கள். கோபப்பட்டால் தங்களின் உடல் நலம்தான் கெடும் என்பதை உணருங்கள்.

குடும்பத் தலைவிகள் குடும்பத்தில் செலவு அத்தியாவசிய தேவையை பூர்த்தி செய்துக் கொள்ளுங்கள். உங்கள் மதிப்பு உயரும். குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் சில விசயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது.

கலைஞர்கள் ஒரு சிலருக்கு ஆடத் தெரியாமல் இருக்கலாம். இதனால், பல பட வாய்ப்புகள் தட்டி போய் இருக்கலாம்.ஆதலால், அதற்குண்டான பயிற்சியில் ஈடுபடுவது நல்லது.

மாணவர்கள் அடுத்ததடுத்த பாடப்பகுதியை சீக்கிரம் ஆசிரியர் முடிக்க இருப்பதால், தாங்கள் அன்றைய பாடங்களை அன்றேஒருமுறையாவது படித்துவிடுவது நல்லது.

பரிகாரம்: பைரவருக்கு செவ்வாய்க்கிழமை அன்று அவரது பாதத்தில் மிளகு வைத்து

## மேஷ ராசி அன்பர்களே!




லாப ஸ்தானத்தில் சனி, ராகு என வலம் வருகிறார்கள். எந்த காரியத்தை எப்படி செய்து முடிக்க வேண்டும் என்று மனதுக்குள் போடும் திட்டங்களை ரகசியமாக வைத்து காரியம் சாதிக்கும் திறமை பெற்ற மேஷ ராசியினரே! இந்த மாதம் பணவரத்து அதிகமாகி பொருளாதாரம் ஓங்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். சுதந்திர எண்ணம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் தங்கள் வியாபாரம் தொடர்பாக பயணம் செல்ல நேரிடலாம். போட்டிகள் விலகும். வாடிக்கையாளர்கள் கருத்துக்கு மாற்று கருத்து சொல்லாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். வார்த்தைகளில் நிதானத்தை கடைபிடிப்பது மற்றவர்களிடம் கருத்து வேற்றுமை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணையின் நலனில் அக்கறை காண்பிப்பீர்கள். பெண்களுக்கு பணவரத்து அதிகமாகி பொருளாதாரம் ஓங்கும். கலைத்துறையினருக்கு தேவையான பொருள்களை வாங்குவீர்கள். நண்பர்களிடையே சுமூக உறவு இருக்க விட்டு கொடுத்து செல்வது நல்லது. வாழ்வில் முன்னேற அக்கறை காட்டுவீர்கள். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: ராகவேந்திரர்.**
**ஸ்லோகம்: ராகவேந்தர் ஸ்லோகம் சொல்லுதல்**
**பரிகாரம்:ஓம் மந்தாய நமஹ' என்ற மந்திரத்தை தினமும் 108 முறை ஜபிக்க வேண்டும்.**
**சந்திராஷ்டமம்: வைகாசி 16 (30/05/26) சனிக்கிழமை காலை 7.42 மணி முதல் 18-ம் தேதி (01/06/26) திங்கள்கிழமை இரவு 7.19 மணி வரை.**

## ரிஷப ராசி அன்பர்களே!




அயன சயன போக ஸ்தானத்தில் சுக்கிரன் என வலம் வருகிறார்கள். திறமையாக எந்த ஒரு காரியத்தையும் செய்து பாராட்டும், மதிப்பும், மரியாதையும் பெறும் ரிஷப ராசியினரே! உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக எதையும் செய்வது நல்லது. எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. அதிக முயற்சி செய்ய வேண்டி இருக்கும். பயணங்கள் ஏற்படலாம். லாபம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணிச்சுமை காரணமாக அதிக நேரம் வேலை பார்க்க வேண்டி இருக்கலாம். நெருப்பு, ஆயுதங்களை பயன்படுத்துபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மனநிறைவு ஏற்படும் வகையில் எல்லாம் நடக்கும். வாழ்க்கை துணையால் நன்மை உண்டாகும். குழந்தைகளுக்காக பாடுபடுவீர்கள். விருந்தினர் வருகை இருக்கும். உறவினர், நண்பர்களுடன் திடீர் கருத்து வேற்றுமை உண்டாகலாம். நிதானம் தேவை. குழந்தைகளை பெண்களுக்கு உணர்ச்சிவசப்படாமல் எதையும் சிந்தித்து செயல்படுவது நன்மை தரும். கடின முயற்சியின் பேரிலேயே காரியங்கள் வெற்றி பெறும். சக கலைஞர்களால் நன்மை அடைவீர்கள். புதிய வாகனங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண அதிக முயற்சி செய்து பாடங்களை படிக்க வேண்டி இருக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை.

**வணங்க வேண்டிய தெய்வம்: மகாலெக்ஷ்மி**
**ஸ்லோகம்: நவக்கிரகஹ ஸ்லோகம் சொல்லுதல்**
**பரிகாரம்: 'ஓம் குருவே நமஹ' என்ற மந்திரத்தை தொடர்ந்து 108 முறை ஜபிக்க வேண்டும்.**
**சந்திராஷ்டமம்: வைகாசி 16 (01/06/26) திங்கள்கிழமை இரவு 7.20 மணி முதல் 21-ம் தேதி (04/05/26) வியாழக்கிழமை காலை 6.41 மணி வரை.**

## மிதுன ராசி அன்பர்களே!




அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், புதன் என வலம் வருகிறார்கள் பலன்கள்: நல்லவர், கெட்டவர் என்று பாராமல் எல்லோரிடமும் நாசூக்காக நடந்து கொண்டு அவர்களை நன்கு பயன்படுத்தி காரிய வெற்றி பெறும் திறமையுள்ள மிதுன ராசியினரே! நீங்கள் விவேகத்துடன் முடிவெடுப்பதில் சிறந்தவர். இந்த மாதம் குழப்பங்கள் நீங்கி மனதில் தெளிவு உண்டாகும். முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். உழைப்பு அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு வேகம் இருக்கும். பணவரத்து தாமதப்படலாம். அரசாங்க அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்களின் வீண் பேச்சால் மனவருத்தம் உண்டாகலாம். எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது. கலைத்துறையினருக்கு காரிய வெற்றிக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். எதிர்பாராத செலவு உண்டாகும். அரசியல்துறையினருக்கு வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம் எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது. வெளிநாட்டு பயண வாய்ப்புகள் வரலாம். மனதில் தெம்பு உண்டாகும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சிவபெருமான்**
**ஸ்லோகம்: சிவாஷ்டகம்**
**பரிகாரம்: தினமும் நாராயணீயம் என்ற பண்டைய உரையை பாராயணம் செய்ய வேண்டும்.**
**சந்திராஷ்டமம்: வைகாசி 21 (04/06/26) வியாழக்கிழமை காலை 6.42 மணி முதல் 23-ம் தேதி (6/06/26) சனிக்கிழமை மாலை 4.15 மணி வரை.**

## கடக ராசி அன்பர்களே!




அயன சயன போக ஸ்தானத்தில் குரு என வலம் வருகிறார்கள். எந்த ஒரு விஷயத்தையும் அது எப்படி நடக்கும் சாதகமா பாதகமா என்று முன்கூட்டியே யூகித்து அதற்கு ஏற்ப நடந்து கொள்ளும் திறமையுடைய கடக ராசியினரே! நீங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு மதிப்பளிப்பவர். இந்த மாதம் வீண் செலவுகள் குறையும் எந்த ஒரு வேலையை செய்து முடிப்பதிலும் இருந்த தடை தாமதம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு புதிய ஆர்டர்கள் பெறுவதில் இருந்த தாமதம் நீங்கும். வரவு இருந்த போதிலும் வியாபாரம் தொடர்பாக திடீர் முதலீடு செலவு உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் இருப்பது நல்லது. மேலிடத்துடன் கனிவை அனுசரிப்பது நல்லது. உறவினர்கள் நண்பர்கள் உதவியாக இருப்பார்கள். பிள்ளைகளுக்காக அலைய வேண்டி இருக்கும். மகிழ்ச்சி உண்டாகும். பெண்களுக்கு அடுத்தவர்கள் பிரச்சினைகளை தீர்க்க முயற்சிகளை மேற்கொள்வதை தவிர்ப்பது நல்லது. தேவையற்ற செலவு ஏற்படலாம். எதிலும் கவனமாக இருப்பது நல்லது. வீண் கவலை ஏற்பட்டு நீங்கும். பணவரத்து திருப்தி தரும். நீங்கள் மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் தயங்க மாட்டீர்கள். பேச்சு திறமை அதிகரிக்கும். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் உதவியுடன் பாடங்களை சந்தேகம் நீங்கி தெளிவாக படிப்பது நல்லது. மனதில் உற்சாகம் உண்டாகும்

**வணங்க வேண்டிய தெய்வம்: ஹயக்கிரீவர்**
**ஸ்லோகம்: ஹயக்கிரிவர் ஸ்லோகம்**
**பரிகாரம்: 'ஓம் ரஹவே நமஹ' என்ற மந்திரத்தை தொடர்ந்து 11 முறை ஜபிக்க வேண்டும்.**
**சந்திராஷ்டமம்: வைகாசி 23 (6/6/26) சனிக்கிழமை மாலை 4.16 மணி முதல் 25-ம் தேதி (8/6/26) செவ்வாய்க்கிழமை இரவு 11.23 மணி வரை.**

## சிம்ம ராசி அன்பர்களே!




அயன சயன போக ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் என வலம் வருகிறார்கள். வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைய வேண்டும் என்று லட்சியத்துடன் இருக்கும் சிம்ம ராசியினரே! நீங்கள் எதிலும் முதலாவதாக இருப்பீர்கள். இந்த மாதம் வேகத்தை விட்டு விவேகமாக செயல்படுவது வெற்றியை தரும். பணவரத்து எதிர்பார்த்ததை போல இருக்கும். எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். மற்றவர்களிடம் உங்கள் கருத்துக்களை கூறும்போது அவர்கள் தவறாக அதை புரிந்து கொள்ளலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி அகலும். எதிர்பார்த்த அளவு வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். கூட்டு தொழில், மேலதிகாரிகள் கூறுவதை கேட்டு அதன்படி நடப்பது நல்லது. குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். கணவன், மனைவியிடையே மனஸ்தாபங்கள் அகலும். பெண்களுக்கு விவேகமாக செயல்படுவது வெற்றியை தரும். எதிர்பார்த்ததற்கு மாறாக காரியங்கள் நடக்கலாம் கவனம் தேவை. வீண் அலைச்சல் ஏற்படும். கலைத்துறையினருக்கு எதிர்பாலினத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும். நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கூறுவதை கவனமாக கேட்டு அதன்படி நடப்பது வெற்றிக்கு உதவும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சூரிய நாராயணன்**

**ஸ்லோகம்: சூரிய காயத்ரி**

**பரிகாரம்: ஆதித்ய ஹ்ருதயம் பாராயணம்**

**சந்திராஷ்டமம்: வைகாசி 25 (8/6/26) திங்கள்கிழமை இரவு 11.24 மணி முதல் 28-ம் தேதி (11/6/26) வியாழக்கிழமை அதிகாலை 4.15 மணி வரை.**

## கன்னி ராசி அன்பர்களே!




அயன சயன போக ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள். சாதுர்யமாக பேசி சகல காரியங்களையும் சாதிக்கும் திறமை உள்ள கன்னி ராசியினரே! நீங்கள் உழைப்பினால் உயர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இந்த மாதம் உங்களுக்கு எதிர்ப்புகள் அகலும். பகை விலகி எதிலும் வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். தகராறுகள் வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் எதையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். திருமண முயற்சி கைகூடும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். பெண்களுக்கு சாதக பாதகங்களை பற்றி கவலைப்படாமல் எந்த காரியத்தையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும்.கலைத்துறையினருக்கு பேச்சு திறமையால் காரியங்களை சாதகமாக செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். எதிர்ப்புகள் மறையும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்பு கரம் நீட்டுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். மனஉறுதி அதிகரிக்கும். மாணவர்களுக்கு போட்டிகள் குறையும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: ராகு, கேது**

**ஸ்லோகம்: ராகு கேது காயத்ரி**

**பரிகாரம்: 'ஓம் கேதவே நமஹ' என்ற மந்திரத்தை தினமும் 11 முறை ஜபிக்க வேண்டும்.**

**சந்திராஷ்டம்: வைகாசி 28 (11/6/26) வியாழக்கிழமை அதிகாலை 4.16 மணி முதல் வைகாசி 30-ம் தேதி (13/6/26) சனிக்கிழமை காலை 7.26 மணி வரை.**

## துலா ராசி அன்பர்களே!




லாப ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள். உழைப்புக்கு ஏற்ற உயர்ந்த இடத்தை பிடிக்க வேண்டும் என்பதை குறிக்கோளாக கொண்டு செயல்படும் துலா ராசியினரே! நீங்கள் அனைவரையும் சரிசமமாக கருதுபவர். இந்த மாதம் சின்ன விஷயங்களுக்கு கூட உங்களுக்கு கோபம் வரலாம். எனவே கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் காரியங்கள் சாதகமாக நடைபெறும். எதிர்பாராத பணதேவை உண்டாகும். அதனை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். எதிலும் இழுபறியான நிலை காணப்படும். புதிய நபர்களுக்கு பொருட்களை சப்ளை செய்யும்போது கவனம் தேவை.குடும்பத்தில் எதைப் பேசுவதாக இருந்தாலும் பேச்சில் நிதானம் தேவை. வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு சொத்துக்களை அடைவதில் தடைகள் ஏற்படும். உயர் நிலையில் உள்ளவர்களுடன் மனவருத்தம் ஏற்படும்படியான சூழ்நிலை வரும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம் கவனம் தேவை. வாகனங்கள் மூலம் செலவு உண்டாகலாம். அரசியல் துறையினருக்கு எதிர்பார்த்த பண வரவு இருக்கும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் பின்னடைவு ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. திடீர் டென்ஷன் ஏற்படலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது

**வணங்க வேண்டிய தெய்வம்: கேதுவை வணங்குதல்**

**ஸ்லோகம்: கணேஷ காயத்ரி ஸ்லோகம்**

**பரிகாரம்: 'ஓம் கணேஷாய நமஹ' என்ற மந்திரத்தை தினமும் 11 முறை ஜபிக்க வேண்டும்.**

**சந்திராஷ்டமம்: வைகாசி 30 (13/6/26) சனிக்கிழமை காலை 7.27 மணி ஆனி 1-ம் தேதி (15/6/26) திங்கள்கிழமை காலை 9.52 மணி வரை.**

## விருச்சிக ராசி அன்பர்களே!




தொழில் ஸ்தானத்தில் கேது வலம் வருகிறார்கள். கோபம் உள்ள இடத்தில் தான் குணம் இருக்கும் என்ற சொல்லுக்கு ஏற்றவாறு கோபப்பட்டாலும் அதை மனதில் கொள்ளாமல் அடுத்தவருக்கு உதவி செய்யும் விருச்சிக ராசியினரே! இந்த மாதம் பேச்சு திறமையால் காரிய வெற்றிகள் உண்டாகும். போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். சின்ன விஷயங்களால் மனநிறைவு உண்டாகும். மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது. எந்த செயலையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் கவனமுடன் பழகுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். கணவன்-மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து பேசுவது நல்லது. பெண்களுக்கு பேச்சு திறமையால் காரியங்களை எளிதாக செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். சின்ன விஷயங்கள் கூட மன நிறைவு தரும்படி நடக்கும். கலைத்துறையினருக்கு யாரையும் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது. திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும். சிலருடன் விரும்பத்தகாத வாக்குவாதங்கள் ஏற்படலாம். அறிவுத்திறன் அதிகரிக்கும். நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசி பொழுதை கழிப்பீர்கள். தொழில் சிறப்பான முன்னேற்றம் பெறும். மாணவர்களுக்கு போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: கணேஷரை வணங்குதல்**

**ஸ்லோகம்: கணேஷ காயத்ரி**

**பரிகாரம்: 'ஓம் கேதவே நமஹ' என்ற மந்திரத்தை தினமும் 27 முறை ஜபிக்க வேண்டும்.**

**சந்திராஷ்டமம்: ஆனி 1 (15/6/26) திங்கள்கிழமை காலை 9.53 மணி முதல் 3-ம் தேதி (17/6/26) புதன்கிழமை பகல் 12. 24 மணி வரை.**

## தனுசு ராசி அன்பர்களே!

பாக்கிய ஸ்தானத்தில் கேது வலம் வருகிறார்கள். உங்கள் திறமைகளை மூலதனமாக கொண்டு வாழ்க்கையில் முன்னேற்றம் காணும் தனுசு ராசியினரே! நீங்கள் எடுக்கும் காரியங்களில் குறுக்கு வழியை பின்பற்ற மாட்டீர்கள். இந்த மாதம் எல்லா விதத்திலும் நன்மை உண்டாகும். எதையும் செய்து முடிக்கும் துணிச்சல் அதிகரிக்கும். எதிலும் வெற்றியும் சந்தோஷத்தையும் தரும். பணம் வருவது அதிகரிக்கும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகளில் தீர்வு கிடைக்கும்.

தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ்நிலையில் உள்ளவர்களால் நன்மை உண்டாகும். தேவையான சரக்குகள் கையிருப்பு இருக்கும். துணிச்சலாக முயற்சிகள் மேற்கொண்டு வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். மேலதிகாரிகளால் நன்மை ஏற்படும். குடும்பத்தில் இருந்து வந்த இறுக்க நிலை மாறும். பெண்களுக்கு காரியங்களை துணிச்சலாக செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் நடந்து முடியும். கலைத்துறையினருக்கு மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெறுவீர்கள். நிலம், வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்புகள் கை கூடி வரும். நீதிமன்ற வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். வேதாந்த விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: தக்ஷிணா மூர்த்தி**
**ஸ்லோகம்: குரு காயத்ரி**
**பபரிகாரம்: ஏழைகளுக்கு உணவு தானம்**
**சந்திராஷ்டமம்: ஆனி 3 (17/6/26) புதன்கிழமை பகல் 12.25 மணி முதல் ஆனி 5-ம் தேதி 19/6/26 வெள்ளிக்கிழமை மாலை 3.56 மணி வரை.**

## மகர ராசி அன்பர்களே!

அஷ்டம ஸ்தானத்தில் கேது வலம் வருகிறார்கள். உழைப்புக்கு அஞ்சாத உறுதியான மனம் கொண்ட மகர ராசியினரே! நீங்கள் எந்த செயலையும் நேரத்தில் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணங்கள் செல்லும்போதும் வாகனங்களில் செல்லும்போதும் கவனம் தேவை. வேலை செய்யும் இடத்தில் இருந்து வந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நன்மை தரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் சச்சரவுகள் தோன்றலாம். அதற்கு இடம் கொடுக்காமல் நடந்து கொள்வது நன்மை தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. குழந்தைகளிடம் இருந்து வந்த கருத்து வேற்றுமைகள் நீங்கும். யோசித்து செய்யும் வேலைகள் சாதகமாக முடியும். உறவுநிலை சிறக்க விட்டுக் கொடுத்தல் அவசியமாகிறது. கூட்டுத்தொழிலில் அதிகம் அக்கறை தேவை. அரசியல் துறையினருக்கு நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சினைகள் விலகும். உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து அயராது பாடுபவர்கள் அதிக பயன் பெறுவார்கள். பயணத்தால் அனுகூலம் உண்டு.

**வணங்க வேண்டிய தெய்வம்: அம்பாள்**
**ஸ்லோகம்: லலிதா ஸகஸ்ர நாமம்**
**பரிகாரம்: 'ஓம் மந்தாய நமஹ' என்ற மந்திரத்தை நீங்கள் தொடர்ந்து 108 முறை ஜபிக்க வேண்டும்.**
**சந்திராஷ்டமம்: ஆனி 5 (19/6/26) வெள்ளிக் கிழமை மாலை 3.57 மணி முதல் ஆனி 7-ம் தேதி 21/06/26 ஞாயிற்றுக் கிழமை இரவு 9.16 மணி வரை.**

## கும்ப ராசி அன்பர்களே!

களத்திர ஸ்தானத்தில் கேது வலம் வருகிறார்கள். அனுபவ அறிவைக் கொண்டு எந்த பிரச்சினை வந்தாலும் எளிதில் சமாளிக்கும் திறமை உடைய கும்ப ராசியினரே! நீங்கள் வேகத்துடன் விவேகமும் கொண்டவர்கள். இந்த மாதம் அறிவுத் திறமை கூடும். சில முக்கிய முடிவுகள் என்பதன் மூலம் நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி காண்பீர்கள். வீண் குற்றச்சாட்டிற்கு ஆளாக நேரிடலாம். கவனமாக இருப்பது நல்லது. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை ஆகியவற்றை வாங்குவதற்கு இருந்து வந்த தடைகள் நீங்கும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு லாபம் தராவிட்டாலும் வருமானத்திற்கு குறைவு இருக்காது. தொழில் விரிவாக்கம் செய்யும் திட்டத்தை தள்ளி போடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்தில் அமைதி உண்டாக கோபத்தை குறைப்பது நல்லது. பெண்களுக்கு அறிவுபூர்வமாக செயல்பட்டு சில முக்கிய முடிவு எடுப்பதன் மூலம் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த காரியம் நிறைவேறும். அடுத்தவர் விஷயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. கோபம் கலந்த வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது நன்று. மாணவர்களுக்கு எதிர்காலத்தை பற்றிய எண்ணம் உண்டாகும். மேல்படிப்பு பற்றிய சிந்தனையில் ஈடுபடுவீர்கள்.

**வணங்க வேண்டிய தெய்வம்: கால பைரவர்**
**ஸ்லோகம்: பைரவர் காயத்ரி**
**பரிகாரம்: 'ஓம் மந்தாய நமஹ' என்ற மந்திரத்தை தொடர்ந்து 108 முறை ஜபிக்க வேண்டும்.**
**சந்திராஷ்டமம்: ஆனி 7 (21/6/26) ஞாயிற்றுக்கிழமை இரவு 9.17 மணி முதல் ஆனி 10-ம் தேதி 24/06/26 புதன்கிழமை அதிகாலை 4.57 மணி வரை**

## மீன ராசி அன்பர்களே !

அயன சயன போக ஸ்தானத்தில் சனி, ராகு என வலம் வருகிறார்கள்.

கிடைத்தது எதையும் சாமர்த்தியமாக தக்க வைத்துக்கொள்வதில் திறமையுடைய மீன ராசியினரே! நீங்கள் நட்பிற்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள். இந்த மாதம் அனைத்து கிரக சஞ்சாரமும் உங்களுக்கு சாதகம் தரும் வகையில் இருக்கிறது. பொருள் சேர்க்கை உண்டாகும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். செவ்வாய் சஞ்சாரம் இட மாற்றத்தை ஏற்படுத்தும். எடுத்த காரியம் தாமதப்படுகிறதே என்ற கவலை உண்டாகும். இரவில் நீண்ட நேரம் கண் விழிக்க வேண்டி வரலாம் கவனம் தேவை. பொறுப்புகள் கூடும். குடும்பத்தில் இருப்பவர்களால் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். வாழ்க்கை துணையின் உடல்நிலையில் நீடித்து வந்த ஆரோக்கிய குறைபாடு சரியாகும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதன் மூலம் செலவு கூடும். விருந்தினர் வருகை இருக்கும். பெண்களுக்கு பயணங்கள் செல்ல நேரிடலாம். எடுத்த வேலையை செய்து முடிக்க காலதாமதம் ஆகலாம். அறிவாற்றலும் செயல்திறமையும் கூடும். உழைப்பு வீண் போகாது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற கூடுதல் நேரம் பாடங்களை படிப்பது நல்லது. பொறுப்புகள் அதிகரிக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சிவபெருமான்**
**ஸ்லோகம்: பைரவர் காயத்ரி**
**பரிகாரம்: 'ஓம் நமசிவாய' என்று தினமும் 21 முறை சொல்ல வேண்டும்.**
**சந்திராஷ்டமம்: ஆனி 10 (24/6/26) புதன்கிழமை அதிகாலை 4.58 மணி முதல் ஆனி 12-ம் தேதி 26/06/26 வெள்ளிக்கிழமை மாலை 3.07 மணி வரை.**

# ஆன்-லைன் மோசடியில் ஈடுபட்ட 3 குற்றவாளிகளுக்கு சிறை; அபராதம்

## திருநெல்வேலி முதலாவது குற்றவியல் நீதிமன்றம் உத்தரவு

## காவலர்களுக்கு SP Dr.V.பிரசண்ண குமார் IPS அவர்கள் பாராட்டு

திருநெல்வேலி மாவட்டத்தில், சைபர் கிரைம் காவல்துறையினரின் தீவிர நடவடிக்கையால் மாவட்டத்தில் முதல் முறையாக சைபர் கிரைம் மோசடி வழக்கில் (Online Scholarship Fraud) குற்றவாளிகளுக்கு 2 மாதங்கள் சிறை தண்டனை மற்றும் ரூ.1,000/– அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 17.03.2026 அன்று திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி அருகே பாணான் குளத்தைச் சேர்ந்த லட்சுமணன்(48) என்பவரது மகளுக்கு கல்வி உதவித் தொகை வந்திருப்பதாக ஆசை வார்த்தைகள் கூறி, வாட்ஸ் அப்பில் QR Code மூலம் சுமார் ரூ.1 லட்சம் மோசடி செய்தது தொடர்பாக சைபர் கிரைம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, சைபர் கிரைம் காவல் ஆய்வாளர் திருமதி. மகாலெட்சுமி அவர்கள் தீவிர விசாரணை மேற்கொண்டு, வழக்கில் சம்பந்தப்பட்ட டெல்லியைச் சேர்ந்த ராஜு(25), ரிஷி(27), ராகுல்(35) ஆகிய 3 பேரையும் கைது செய்தார்.

புலன் விசாரணை முடிவில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து, இவ்வழக்கு விசாரணை திருநெல்வேலி முதலாவது குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், குற்றவாளிகள் மூவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, நீதித்துறை நடுவர் திரு.சத்யா அவர்களால் குற்றவாளிகளுக்கு, தலா 2 மாதங்கள் சிறை தண்டனையும் ரூ.1000/– அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில், சாட்சிகளை துரிதமாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த திருநெல்வேலி சைபர் கிரைம் கூடுதல் காவல் கண் காணிப்பாளர் திரு.முருகன், இவ்வழக்கில் திறம்பட புலனாய்வு விசாரணை செய்த காவல் ஆய்வாளர் திருமதி.மகாலட்சுமி, வழக்கின் விசாரணைக்கு உதவி செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சுப்பிரமணியன் மற்றும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் திரு.அருண் பாண்டியன் அவர்களையும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.V.பிரசண்ணா குமார் IPS அவர்கள் வெகுவாக பாராட்டினார்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி



# இறைவனின் தசாவதாரங்கள்

ஓம் காளி    ஓம் நமசிவாய




## கருடசித்தர்

Dr.பாலகிருஷ்ண சுவாமி
எரசை, தேனி மாவட்டம்.




நம் அகண்ட பாரத தேசம் ஒரு தெய்வீக தேசமாகும். பூமியெங்கும் பல அசுர சக்திகள் வேறு உலகத்தில் இருந்து பூமியில் இறங்கி உயிர்களுக்கும் மனிதர்களுக்கும் துன்பம் கொடுத்து தர்மத்தை அழித்து அதர்மத்தை நிலை நாட்டப் பார்க்கும் பொழுது அந்த அசுர சக்தியான அதர்மத்தை அழித்து தர்மத்தை காக்க பரந்தாமன் திருமால் பூமியில் அவதாரம் எடுக்கின்றார்.

ஒவ்வொரு யுகத்திலும் தீய சக்திகள் பூமியை ஆக்கிரமிக்கும்போது அவற்றை அழிப்பதற்காக விஷ்ணு பகவான் பூமியில் அவதாரம் செய்கிறார். அப்படி தர்மத்தை காக்க அவதாரம் எடுத்ததை தசாவதாரமாக சொல்கின்றோம்.

ஏற்கெனவே ஒன்பது அவதாரங்கள் முடிந்துவிட்டது. பத்தாவதாக கல்கி அவதாரம் இனிமேல் நடக்கப்போகும் அவதாரம் ஆகும்.

திருமாலின் பத்து அவதாரங்கள் என்னென்ன என்று பார்ப்போம்.

தசாவதாரங்கள்

1. மச்ச அவதாரம் – மீன் வடிவம்
2. கூர்ம அவதாரம் – ஆமை வடிவம்
3. வராக அவதாரம் – பன்றி வடிவம்
4. நரசிம்ம அவதாரம் – சிங்கம் வடிவம்
5. வாமன அவதாரம் – குறுகிய வடிவம்
6. பரசுராம அவதாரம் – கோடாரியோடு வடிவம்
7. ராம அவதாரம் – வில்லோடு வடிவம்
8. பலராம அவதாரம் – கலப்பையோடு வடிவம்
9. கிருஷ்ண அவதாரம் – புல்லாங்குழல்
10. கல்கி அவதாரம் – கையில் வாள் கொண்ட வடிவம்

என்று பத்து அவதாரங்களாகப் போற்றப்படுகின்றன.

ஒவ்வொரு அவதாரங்களும் ஏன் எடுக்கப்பட்டது, அது எந்த யுகத்தில் நடந்தது. ஒவ்வொருஅவதாரங்களின் கோவில்கள் எங்கு உள்ளது, அதை நாம் எப்படி வழிபடுவது என்று ஒவ்வொன்றாக பார்ப்போம்.

திருமாலின் பத்து அவதாரங்களில் முதல் அவதாரம் மச்ச அவதாரம்.

முதல் அவதாரம்: மச்ச அவதாரம்

பிரபஞ்சம் முழுவதும் பலகோடி அண்டங்களும், பலகோடி சிற்றண்டங்களும் பலகோடி பேரண்டங்களும் இருக்கின்றன.

பஞ்ச பூதங்களில் உலகம் இயங்குகின்றது. பஞ்ச பூதங்களில் உலகங்களும் கோள்களும் உள்ளன.

பஞ்ச பூதங்கள்: நிலம் – பிருதிவி, நீர் – அப்பு, நெருப்பு – தேயு, காற்று – வாயு, வெளி – ஆகாயம் என ஐந்து பெரும் பஞ்ச பூதங்கள் என்கின்றோம்.

நிலம்: உலங்கள் பூமியைப் போல் ஆயிரம் மடங்கும் பெரிதான நிலப்பரப்பு கொண்ட உலகமான கோள்களும் பிரபஞ்சத்தில்உள்ளது. அவைகள் எல்லாம் நிலவுலகம் என்பார்கள்.

நீர்: பூமியில் இருப்பதுபோல் இலட்சம் மடங்கு கடல் நீர் உள்ள நீர் உலகமும் இருக்கின்றது. அவைகள் நீர்க்கோள்கள் என்பர். இந்த பிரபஞ்சத்தில் பூமியைப் போல் பல ஆயிரம் பூமியை மூழ்கடிக்கக் கூடிய கடல் நீர்க் கோள்களும் சுற்றிக் கொண்டுதான் இருக்கின்றன. இதை கடல் உலகம் என்பார்கள்.

நெருப்பு: உலகங்கள் நம்முடைய சூரியனை விட ஆயிரக்கணக்கான மடங்கு பெரிதான நெருப்புக் கோள்களும் பிரபஞ்சத்தில் சுற்றிக் கொண்டுதான் இருக்கின்றது. இவற்றை நெருப்பு உலகம் என்பார்கள்.

காற்று: நம் பூமியில் உள்ள காற்றைப்போன்று நம் பூமியை விட இலட்சம் மடங்கு பெரிதான காற்று மட்டும் நிறைந்த வாயு உலகங்களும் இந்தப் பிரபஞ்சத்தில்உள்ளது. இவற்றை பெரும் வாயு உலகம் என்பார்கள்.

ஆகாயம்: ஆகாயம் எல்லா இடத்திலும் வியாபித்து உள்ளது. அண்டத்திலும் உள்ளது. இதை கண்ணுக்குத் தெரியாத சூட்சம உலகம் என்பார்கள். மேலே சொன்ன நான்கு உலகங்களுக்கும் ஆகாய உலகத்திற்குள் அடங்கும். இவற்றை சூட்சம உலகம் என்பார்கள்.

ஆனால், நம் பூமியில் ஐந்து பூதங்களும் சேர்ந்து உள்ளது. இது கர்ம பூமியாகும். நாம் செய்யும் பாவ, புண்ணியத்தின் அளவின்படி பலன் கிடைக்கும் பூமியாகும்.

யுகங்கள் நான்கு:

1. கிருத யுகம் – 17,28,000 ஆண்டுகள்
2. திரோதா யுகம் – 12,96,000 ஆண்டுகள்
3. துவாபர யுகம் – 8,64,000 ஆண்டுகள்
4. கலியுகம் – 4,32,000 ஆண்டுகள்

இந்த நான்கு யுகங்களும் சேர்ந்து முடியும்போது ஒரு சதுர்யுகம் என்பார்கள். இதை மகாயுகம் என்றும் சொல்வார்கள். 71 மகா யுகங்கள் சேர்ந்தது 1 மன் வந்திரம் ஆகும். 14 மன் வந்திரங்கள் சேர்ந்தது ஒரு கல்பம் ஆகும். இதேபோல் 30 கல்பங்கள் உள்ளன.

கல்பங்கள் – 30

1. வாம தேவ கல்பம், 2.சுவேத கல்பம், 3. நீல லோகித கல்பம், 4. ரந்திர கல்பம், 5. ரௌரவ கல்பம், 6.தேவ கல்பம், 7. விரக கிருட்டிண கல்பம், 8. கந்தற்ப கல்பம், 9. சத்திய கல்பம், 10.ஈசான கல்பம், 11. தமம்

கல்பம், 12.சாரசுவத கல்பம், 13. உதான கல்பம், 14. காருட கல்பம், 15. கௌரம கல்பம், 16. நரசிம்ம கல்பம், 17. சமான கல்பம், 18. ஆக்நேய கல்பம், 19. சோம கல்பம், 20. மானவ கல்பம், 21. தப்புருச கல்பம், 22. வைகுண்ட கல்பம், 23. லெச்சுமி கல்பம், 24. சாவித்ரி கல்பம், 25. கோர கல்பம், 26. வராக கல்பம், 27. வைராக கல்பம், 28. கௌரி கல்பம், 29.மகேந்திர கல்பம், 30. பிதிர் கல்பம் என்று முப்பது வகைப்படும்.

கல்ப காலம்:

ஒரு கல்ப காலம் என்பது பிரம்மனின் ஒரு பகல் மட்டும் குறிக்கும். பகலுக்கு சமமான இரவும் உண்டு. இரவு காலங்களில் எந்தப் படைப்பும் இருக்காது. பகல் என்பது பிரபஞ்சத்தின் பகலாகும். இரவு என்பது பிரபஞ்சத்தின் இரவாகும். பிரபஞ்சம் வெளிச்சத்தோடு இருத்தல் பகலாகும். வெளிச்சம் ஒடுங்கி ஆகாய வெளியில் ஒடுங்குவது இருளாகும். இரவே பிரம்மனின் தூக்கமாகும். கோடிக்கணக்கான பிரம்மாக்கள் இருப்பதாக காக புசுண்டர் கூறுகின்றார்.

ஒவ்வொரு அண்டத்திற்கும் ஒவ்வொரு பிரம்மா படைக்கும் தொழிலைச் செய்கின்றனர். கோடிக்கணக்கான அண்டங்களுக்கும் கோடிக்கணக்கான பிரம்மாக்கள் இருக்கின்றார்கள்.

நம்முடைய பூமியைபோல கோடிக்கணக்கான பூமி நம் அண்ட வெளியில் இருக்கின்றது. இவைகள் அழிந்து அழிந்து மீண்டும் இன்னொரு இடத்தில் தோன்றக் கூடியது. பிரபஞ்சத்தை ஐந்து சக்திகள் இயக்குகின்றது என்று திருமூலர் கூறுகின்றார்.

1. படைத்தல், 2. காத்தல், 3. அழித்தல் 4. மறைத்தல், 5.அருளல் என்று கூறுகின்றார்.

இந்த பிரம்மாவின் இருளான கல்ப காலங்களில் தீய அசுர பெருஞ்சக்திகள் கோள் உலகங்களை அழிக்கவும், மறைக்கவும் போன்ற வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கும். அந்த ஆபத்து சமயங்களில் அனைத்து உலகங்களிலும் காத்து தீய சக்திகளை அழிப்பவர் திருமால்.

பிரம்மாவின் உறக்க காலம்:

கிருத யுகத்தில் படைப்பு கடவுளான பிரம்மா உறக்க காலத்தில் இருந்தார். அவருடைய கொட்டாவிக் காற்றினால் வேதங்கள் உருவாகின. பிரம்மாவின் கல்ப காலம் நடக்கும்போது பூமிக்கு கிருதயுகம் நடந்து கொண்டிருந்தது. பிரம்மாவுக்கு இரவு ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

சோமுகாசுரன் வேதங்களை திருடுதல்:

அப்பொழுது வேறு அண்டத்தில் இருந்து



வந்த அரசு தீய சக்தியான சோமுகாசுரன் என்ற அயக்கிரீவன் என்னும் குதிரை முகம் கொண்ட அரக்கன், தன் யோக சித்தியினால் அந்த வேதங்களைத் திருடி அண்ட வெளியில் இருக்கும் நீர்க்கோளமான கடல் உலகத்தில் ஒளித்து வைத்து விட்டான். அது பிரம்மாவின் தூக்க கல்பமாக இருந்தது. பிரம்மா இந்த நிகழ்வை அறியாமல் தூங்கி விட்டார். வேதம் இல்லை என்றால் அறம் ஒழுங்காக நடக்காது.

ஒவ்வொரு அண்டத்திற்கும் ஒவ்வொரு பிரம்மா உண்டும். நம் இருக்கக் கூடிய அண்டத்தின் பிரம்மா தூங்கும்போது இது நடக்க ஆரம்பித்தது. பிரம்மா உறங்கும்போது தான் பிரளயம் அண்டத்தில் ஏற்படும். ஆழிப் பேரலைகளாலும் அண்டத்தில் உள்ள நீராலும் அண்டத்தில் உள்ள உலகங்கள் நீரில் மூழ்கிவிடும்.

கிருத யுக ஜல பிரளயம்:

பூமியில் கிருதயுகம் நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது நம் பூமியல் மனிதர்கள் குமரிக் கண்டத்தில் வாழ்ந்தார்கள். முதன் முதலில் மனிதன் வாழ்ந்த கண்டம் குமரி கண்டமாகும். அந்தக் குமரி கண்டத்தில் சிவனை வழிபடுபவர்களும் வாழ்ந்தார்கள். திருமாலை வழிபடுபவர்களும் வாழ்ந்தார்கள்.

அந்தக் குமரி கண்டத்தில் மனு என்ற தமிழ் மன்னரும் வாழ்ந்துவந்தார். அவர் திருமால் மேல் பற்று கொண்டவர். இவர் உணவு உட்கொள்ளாமல் தண்ணீரை மட்டுமே அருந்து திருமாலை வழிபட்டுக் கொண்டு நீதியாக வாழ்ந்து வந்தார். இவருக்கு சத்திய விரதன் என்ற பெயரும் உண்டு.

மனு ஒரு நாள் ஆற்றுக்குச் சென்று, தன் மூதாதையர்களுக்கு தண்ணீரை இறைத்து தர்ப்பணம் செய்யும் போது, இரு கைகளாலும் தண்ணீரை எடுத்தார். அவர் கைகளில் ஒரு மீன் குஞ்சு அழகாக நீந்திக் கொண்டு இருந்தது. அதைக் கண்டு மகிழ்ந்தார் மனு. அந்த மீன் பேசியது, “ராஜாவே, என்னை மீண்டும் ஆற்றுக்குள் விடாதீர்கள். பெரிய மீன்கள் என்னை விழுங்கிவிடும். என்னை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள்” என்றது.

மனுவும் தான் கொண்டு சென்றிருந்த கமண்டலத்திற் குள் அந்த மீனை போட்டு, அரண்மனைக்கு எடுத்து வந்தார். அன்று இரவே அந்த மீன் கமண்டல அளவு வளர்ந்துவிட்டது. இந்தப் பாத்திரம் எனக்கு போதவில்லை என்றது. உடனே மீனை எடுத்து அருகில் இருந்த குளத்தில் விட்டார். அதுவும் வெகுசீக்கிரமாய் வளர்ந்தது. பின்பு அந்த மீனை ஆழமான அகலமான ஏரியில் போட்டார். மீண்டும் அது ஏரியின் அளவு வளர்ந்துவிட்டது.

கடைசியாக சமுத்திரத்தில் கொண்டு போய் விட்டார். அந்த மீன் மீண்டும் கூறியது, “மனு முனிவரே, கடலில் விடாதே, பெரிய திமிங்கிலங்கள் உள்ளது உங்களுடன் என்னை கூட்டிச் செல்லுங்கள்” என்றது.

அதற்கு மனு, இரு கைகூப்பி வணங்கினார். பரம்பொருளே மீனாக வந்து என்னை சோதிக்காதீர். இன்னும் வளர்ந்தால் விடுவதற்கு இடம் இல்லை என்னை சோதிக்க வந்த காரணம் என்ன திருமாலே என்றார்.

அதற்கு அந்த மச்ச மூர்த்தி பேசினார், “இன்னும் ஏழு நாளில் இந்த பூமி முழுவதும் மழை நீராலும், கடல் கோளாலும் கடல் சுனாமியாலும் நீருக்குள் மூழ்கப் போகின்றது. அதனால், நீ நாவாய்களை தயாரித்துக் கொள். இந்த குமரிக் கண்டத்தில் உள்ள மக்கள் அனைவரையும் நாவாய்களை உருவாக்கச் சொல். அதில் அனைத்து விதமான தானிய விதைகளையும், செடிகளையும், அனைத்து உயிர்களையும் ஏற்றிக் கொள்ளச் சொல், நீ பெரிய நாவாயை உருவாக்கி, அனைத்து மக்களையும் ஏற்றிக் கொள். வாயாக நீர் வர ஆரம்பித்ததும், நாவாய் மிதக்கும். அதை வாசுகி பாம்பால் என் கொம்பில் கட்டு, பிரம்மன் தூக்கம் விழிக்கும் வரை ஜலப் பிரளயம் எல்லா உலகங்களிலும் இருக்கும். நல்லவர்களைக் காக்க நானே மச்சமாக எல்லா உலகங்களிலும் வந்து உயிர்களை காப்பேன் ”என்றார்.

இந்தச் செய்தியை மக்கள் எல்லோருக்கும் கூறினார். மக்கள் பலர் நம்பவில்லை. நம்பியவர்கள் மனுவின் நாவாய் கப்பலில் ஏறினார்கள். ஜலப் பிரளயம் ஆரம்பித்தது. நம்பாதவர்கள் குமரிக் கண்ட கடல் கோள், ஜலப்பிரளயத்தில் அழிந்தார்கள்.

அப்பொழுது மனு முனிவரின் நாவாய் கப்பல் மிதக்க ஆரம்பித்தது. அவரோடு சேர்ந்து வேறு நாவாய்களும் மிதந்தன. மனுவின் நாவாய் மிகப்பெரிதாக இருந்தது. சிறு கப்பல்களை அதோடு இணைத்தார்கள். ஜலம் பூமி முழவுதும் நிறைந்தது. விஷ்ணு பகவான் மச்ச மூர்த்தியாக நீரில் நீந்தி வந்தார். நாவாய் கப்பலை மீனின் கொம்பினில் மனு கட்டினார். பிரம்மனின் நித்திரை காலம் முழுவதும் நீரில் மிதந்தது.

பிரம்மாவின் நித்திரை காலம் முடிந்து நீர் வற்ற ஆரம்பித்து விட்டது. நிலப்பரப்பு தெரிய ஆரம்பித்துவிட்டது. மனுவின் நாவாய்களை மச்ச மூர்த்தி கரையில் விட்டார். சிறு சிறு கப்பல்களை பூமியின் பல பகுதிகளில் இழுத்துச் சென்று நிலப்பரப்பில் விட்டார். பூமியின் பல இடங்களிலும் மனித இனம் வளர ஆரம்பித்தார்கள். பிரம்மன் நித்திரை முடிந்த வெளிச்சம் வர ஆரம்பித்தது. பிரம்மன் தன் வேதங்கள் மறைக்கப்பட்டதை கண்டார். திருமாலை நோக்கி தவம் செய்தார். மச்ச மூர்த்தியாக இருந்த திருமால் நீர் உலகத்தின் ஹயக்கிரீவன் ஒளித்து வைத்திருந்த வேதங்களை கண்டார். பின்பு நீர் உலகத்தில் உள்ளே மீனாகச் சென்று அந்த தீய சக்தி அசுரனை அழித்து வேதத்தை மீட்டு பிரம்மாவிடம் ஒப்படைத்தார்.

மீண்டும் பிரம்மா தன் தொழிலைச் செய்யத் தொடங்கினார். பூமியில் கிருத யுகத்தில் வந்த மச்ச மூர்த்தி அனைவருக்கும் அருள்புரிந்து மறைந்தார். மச்ச மூர்த்தி மந்திரங்களைச் செபித்து அவர் பூசை செய்யும் போது நம்முடைய அனைத்து தடைகளும் விலகி நன்மை நடக்கும். அதர்மம் எங்கு தோன்றினாலும், அதை அழித்து தர்மத்தை நிலை நாட்ட பூமியில்பகவான் விஷ்ணு அவதரிப்பார். அதர்மம் தோன்றி தர்மம் எங்கு குறைகிறதோ அங்கு அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்ட மீண்டும் ஒவ்வொரு யுகத்திலும் வருவேன் என்று பகவத் கீதையில் கிருஷ்ணர் கூறுகின்றார்.

*அதர்மம் அழிந்து தர்மம் வளரட்டும்.*



# செயின்ட் தாமஸ் மவுண்ட் காவல் நிலையம் சார்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மடுவங்கரை பாலம் அருகே பணிபுரியும் வடஇந்திய தினக்கூலி தொழிலாளர்களுக்கு, போதைப்பொருள் பழக்கத்தின் தீமைகள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கான சட்டரீதியான விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தொழிலாளர்கள் ஆரோக்கியமான மற்றும் போதைப்பொருள் இல்லாத வாழ்க்கையை நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டதுடன், போதைப்பொருள் தொடர்பான செயல்பாடுகள் குறித்து உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அனைவரும் இணைந்து பாதுகாப்பான மற்றும் போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவோம் என காவல் துறை சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

நிருபர்: A.M.தியாகராஜன், சென்னை.

# மதுரையில் மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

தமிழகத்தில் பள்ளிகள் திறக்கப்பட்ட மே 4–ம் தேதி மதுரை மாநகர காவல் சார்பாக, B1 விளக்குத்தூண் காவல் நிலைய பகுதியில் உள்ள அவ்வை பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் C3 எஸ்.எஸ் காலனி காவல்நிலைய பகுதியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில், காவல் ஆய்வாளர்களின் தலைமையில், பள்ளி மாணவிகளுக்கு பெண்கள் பாதுகாப்பு, போச்சோ சட்டம், காவல் உதவி செயலியின் முக்கியத்துவம், சாலை போக்குவரத்து மற்றும் சமூக ஊடகம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை.





# கிட்னி முத்திரை

**சுட்டு விரலின் நுனியையும் மோதிர விரலின் நுனியையும் பெருவிரலின் அடியில் வைத்து அந்த விரல்களின் பின்புறத்தை மெதுவாகப் பெருவிரலால் அழுத்தவும், தேவையற்ற நீர் அகன்று உடல் சூட்டை அதிகப்படுத்தும். நெஞ்சு சளி, சிறுநீரகப் பிரச்சினை தீரும். நோயுள்ளபோது மட்டும் இம்முத்திரையை தரையில் சம்மணங்காலிட்டு தினமும் 10 நிமிடம் செய்க.**









## காவலர்களின் குழந்தைகளுக்கு உயர் கல்வி பயில

**கல்வி உதவித்தொகை வழங்கிய SP Dr.A.பிரதீப் IPS அவர்கள்**



*திண்டுக்கல் மாவட்டத்தில் பணிபுரியும் 5 காவல்துறையினர் மற்றும் அமைச்சு பணியாளர்களின் குழந்தைகள் 12–ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று உயர் கல்வி பயில அரசு வழங்கும் சிறப்பு கல்வி உதவித்தொகையை SP Dr.A.பிரதீப் IPS அவர்கள் நேரில் வழங்கினார்கள்.*

சிறப்பு நிருபர்: குரு.சரவணன், திண்டுக்கல்.

# ஆறுமுகநேரி காவல்துறை ஆய்வாளர் அங்கேயே தொடர பொதுமக்கள் கோரிக்கை

ஆறுமுகநேரி காவல்துறை ஆய்வாளராக நேர்மையுடன் மிகவும் துணிவுடன் செயல்படும் காவல் ஆய்வாளர் திரு.திலீபன் அவர்களை தொடர்ந்து ஆறுமுகநேரில் பணி அமர்த்த தமிழக அரசை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சட்டம் ஒழுங்கை பாதுகாக்க கூடிய நேர்மையான அதிகா ரிகள் தொடர்ந்து அந்த காவல் நிலையத்தில் இருந்தால் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கபடும். இளஞ்சிறார்களை போதை பழக்கங்களில் இருந்து பாதுகாப்பது பெற்றோர்கள் கடமை மட்டும் அல்ல காவல்துறை அதிகாரிகளின் கடமை என்று தனது பணியில் திறம்பட செயல்படும் காவல் ஆய்வாளர் திரு.திலீபன் போன்ற காவல் அதிகாரி இனி கிடைக்க வாய்ப்புகள் இல்லை. தமிழ்நாடு அரசு ஆறுமுகநேரி காவல் ஆய்வாளர் திரு.திலீபன் அவர்களை அதே காவல் நிலையத்தில் பணி புரிய ஆணை பிறப்பிக்க வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.



நிருபர்: N.ராமசாமி, தூத்துக்குடி.

# உடல் நலம் காக்கும் அருமருந்து கடுக்காய்



நாம் உடல் நலமுடன் வாழ அறுசுவைகளும் சரிவர தரப்பட வேண்டும். எந்த சுவை குறைந்தாலும் கூடினாலும் நோய் வரும்.

நமது அன்றாட உணவில் துவர்ப்பின் ஆதிக்கம் மிகவும் குறைவாக உள்ளது. துவர்ப்பு சுவையே ரத்தத்தை விருத்தி செய்வதாகும். சுத்தம் செய்வதாகும். ஆனால், உணவில் வாழைப்பூவை தவிர்த்து பிற உணவுப் பொருட்கள் துவர்ப்பு சுவையற்றதாகும். பின் எப்படி ரத்த விருத்தியை பெறுவது. அன்றாடம் நமது உணவில் கடுக்காயை சேர்த்து வந்தால் நமது உடம்புக்கு தேவையான துவர்ப்பை தேவையான அளவில் பெற்று வரலாம்.

கடுக்காய் பொடி அனைத்து நாட்டு மருந்து கடைகளிலும் கிடைக்கும். இதில் தினசரி ஒரு சிறிய சிட்டிகை அளவு இரவு உணவுக்குப் பின், இளம் சூடுநீரில் சாப்பிட்டு வர நோயில்லா நீடித்த வாழ்க்கையைப் பெறலாம்.

கண் பார்வை கோளாறுகள், காது கேளாமை, சுவை இன்மை, பித்த நோய்கள், வாய் புண், நாக்குப்புண், மூக்குப்புண், தொண்டைப்புண், இரைப்பை புண், குடற்புண், ஆசனவாய் புண், அக்கி, தேமல், படை, தோல் நோய்கள், உடல் உஷ்ணம், வெள்ளைப் படுதல், மூத்திர குழாய்களின் உண்டாகும் புண், மூத்திர எரிச்சல், கல்லடைப்பு, சதை அடைப்பு, நீர் அடைப்பு, பாத எரிச்சல், மூல எரிச்சல், உள்மூலம், சீழ் மூலம், ரத்தமூலம், இரத்த பேதி, பவித்திரக்கட்டி, சர்க்கரை நோய், இதய நோய், மூட்டு வலி, உடல் பலவீனம், உடல் பருமன், ரத்தக் கோளாறுகள், ஆண்களின் உயிரணுக்கள் விருத்தி போன்ற அனைத்துக்கும் இறைவன் அருளிய அருமருந்து கடுக்காய்.

இதைப்பற்றி சித்தர் கூறும் பாடல்..,

காலை இஞ்சி, கடும்பகல் சுக்கு,
மாலை கடுக்காய் மண்டலம் உண்டால்
விருத்தனும் பாலனாமே.

எனவே தொடர்ந்து கடுக்காய்பொடியை இரவில் சாப்பிட்டு வர நோய்கள் நீங்கி இளமையோடு வாழலாம் கடுக்காய் வீடுகளில் கண்டிப்பாய் இருக்க வேண்டிய பொக்கிஷமாகும்.




*சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல் நிலைய கொலை குற்ற வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் அழகு சுந்தரம், சந்துரு, பாலசிவி, அழகேசன், வசந்தபாலன் ஆகியோரை குண்டர் சட்டத்தில் கைது செய்ய SP திரு இரா.சிவபிரசாத் IPS அவர்களின் பரிந்துரையின்படி மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி IAS அவர்களால் உத்தரவிடப்பட்டு குண்டர் சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர்.*

நிருபர்: C.சிவகுருநாதன், சிவகங்கை



**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப்ப படும். (114)**

விளக்கம்: இவர் நீதியாளர், இவர் நீதியற்றவர் என்ற வேறுபாட்டை அவரவர் தம் செல்வம், புகழ், பிள்ளைகளின் ஒழுக்கம் ஆகியவற்றால் அறிந்து கொள்ளலாம்.

# சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றவாளிக்கு 5 ஆண்டுகள் சிறை

## காவலர்களுக்கு SP Dr.V.பிரசண்ண குமார் IPS அவர்கள் பாராட்டு

கடந்த 2024–ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் சேவியர் என்ற பூம்பூம் சேவியர் (57) என்பவர் 6 வயது சிறுமியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய், வள்ளியூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில், காவல்துறையினர் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து, அப்போதைய வள்ளியூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.C.S.சாந்தி புலன் விசாரணை மேற்கொண்டு, சேவியரை கைது செய்தார்.

புலன் விசாரணையின் முடிவில் நீதி மன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து, வழக்கின் விசாரணையானது, திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், குற்றவாளிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, நீதிபதி திரு. சுரேஷ் குமார் அவர்களால் குற்றவாளிக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ. 5,000/– அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.50,000/– நிவாரணத்தொகை வழங்க உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கின் நீதிமன்ற விசாரணை நடைபெற, சிறப்பாக கண்காணிப்பு செய்த கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.M.சண்முகம் (CWC) அவர்கள், வள்ளியூர் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு.வெங்கடேஷ் அவர்கள் மற்றும் வள்ளியூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.சாந்தி, வழக்கினை திறம்பட புலன் விசாரணை செய்த அப்போதைய வள்ளியூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.C.S.சாந்தி (தற்போது தூத்துக்குடி மாவட்டம்) மற்றும் வழக்கின் விசாரணைக்கு உதவியாக இருந்த தலைமை காவலர் திருமதி.மாலதி, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் திருமதி. உஷா அவர்களையும் திருநெல்வேலி SP Dr.V.பிரசண்ண குமார் IPS அவர்கள் வெகுவாக பாராட்டினார்.



திருநெல்வேலி மாவட்ட காவல்துறையினரின் தீவிர நடவடிக்கையால், இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 11 போக்சோ வழக்குகளில் ஈடுபட்ட 11 குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடத்தக்க வகையில்,

1 குற்றவாளிக்கு மரண தண்டனையும், 2 குற்றவாளிக்கு சாகும் வரை ஆயுள் தண்டனையும், 2 குற்றவாளிக்கு ஆயுள் தண்டனையும், 1 குற்றவாளிக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனையும் பெற்று தரப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்ட காவல்துறையானது பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, அவர்களுக்கெதிராக குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது தனிப்பட்ட கவனத்துடன் தீவிரமான மற்றும் தொடர்ச்சியான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என SP Dr.V.பிரசண்ண குமார் IPS அவர்கள் தெரிவித்துள்ளார்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி.

# 1759-ம் ஆண்டே பீரங்கிக்கு முன் நின்று சுதந்திரம் கேட்ட வீரன் அழகுமுத்துக்கோன்





1857–க்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் ஒரு மன்னன் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர்த்தொடுத்தான். பெயர் வீரன் அழகுமுத்துக்கோன்.

"இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்டம் 1857–தான்" - இந்த வரலாற்றைத்தான் நாம் அனைவரும் படித்திருக்கிறோம். ஆனால் 1857–க்கு முன்னரே, 1759–ம் ஆண்டே, ஆங்கிலேயருக்கு எதிராகப் போர்த்தொடுத்த ஒரு தமிழ் மன்னனைப் பற்றி நமக்குத் தெரியுமா?

**யார் இந்த அழகுமுத்துக்கோன்?**

1728–ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம், கட்டாலங்குளத்தில் பிறந்தவர். 1750–ம் ஆண்டு, 22–வது வயதில் கட்டாலங்குளத்தின் மன்னராக முடிசூட்டிக் கொண்டவர். எட்டயபுரம் மன்னர் எட்டப்பனின் நெருங்கிய நண்பர்.

**அவரது மகத்தான செயல்:**

1759–ம் ஆண்டு - இவர்தான் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராகப் போர்த்தொடுத்த முதல் தமிழ் மன்னர்களில் ஒருவர். பாளையக்காரர்கள் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டுவதைத் தடுத்தார். ஆங்கிலேயர் கொள்ளையிட்ட நெல்லை மீட்கப் போராடினார். பெத்தநாயக்கனூர் கோட்டையில் நடந்த போரில், வலது கால் சுடப்பட்டும் போரை நிறுத்தவில்லை.

**அவர் பட்ட கொடுமை:**

ஆங்கிலேயர்களால் பிடிக்கப்பட்டு 6 தளபதிகள் மற்றும் 248 போர் வீரர்களுடன் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டார். நடுக்காட்டுருக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு பீரங்கி முன் நிறுத்தப்பட்டு, "வரி செலுத்துங்கள், மன்னிப்பு கேளுங்கள்" என்று வற்புறுத்தப்பட்டார். 248 வீரர்களின் வலது கரங்கள் வெட்டப்பட்டன.

பீரங்கி முன் நின்ற அழகுமுத்துக்கோனும், அவரது 6 தளபதிகளும் மார்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆனால், மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார். "என் ஆட்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்" என்று முழங்கியபடியே உயிர்துறந்தார்.

**தெரியாத உண்மைகள்:**

இவர்தான் 1857–க்கு 100 ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆங்கிலேயருக்கு எதிராகப் போர்த்தொடுத்த முதல் வீரர்களில் ஒருவர். இவரது தியாகத்தை 2015–ம் ஆண்டுதான் இந்திய அரசு கௌரவித்தது. அப்போது இவரது பெயரில் தபால் தலை வெளியிடப்பட்டது. ஜூலை 11–ம் தேதி ஆண்டுதோறும் கட்டாலங் குளத்தில் அவரது மணிமண்டபத்தில் அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படுகிறது. இவரைப் பற்றிய முழுமையான ஆவணப் படுத்தப்பட்ட வரலாறு இன்னும் முழுமையாக வெளிவரவில்லை.

**இன்றைய நிலை**

நம் பாடப்புத்தகங்களில் 1857–ம் ஆண்டு சிப்பாய்க் கலகத்தின் பெயரைத்தான் "முதல் விடுதலைப் போர்" என்று படிக்கிறோம். ஆனால் 1759–ம் ஆண்டே பீரங்கிக்கு முன் நின்று, மார்பில் குண்டைத் தாங்கி, சுதந்திரத் திற்காக உயிரைத் துறந்த இந்த மாவீரனின் பெயர் மறைக்கப்பட்டுக் கிடக்கிறது. சரித்திரத்தில் இடம்பெறாத ஒரு நாயகனின் தியாகத்தை மட்டுமாவது நாம் நினைவில் கொள்வோம்.





# சி.எஸ்.ஆர் போட மறுக்கும் காவலர்கள்

## கன்னியாகுமரி SP அவர்களுக்கு கோரிக்கை



கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து காவல் நிலையத்திலும் மக்கள் கொடுக்கும் புகாரில் முதல் கட்டமாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி CSR (சி.எஸ்.ஆர்) போட வேண்டும். ஆனால், இப்போது காவல்துறைகளில் மறுக்கப்படுகிறது.

மக்கள் கொடுத்த புகார் காவல் துறையில் இருக்கிறதா இல்லையா என்ற ஒரு கேள்வியும் எழும்புகிறது. இரு தரப்பில் உள்ள பிரச்சினைகள் முதல் கட்டமாக கொடுக்கக்கூடிய நபருக்கு CSR போட்டுக் கொடுக்காமல், 2 தரப்பிலும் மனுக்கள் வாங்கினால் காவல்துறையில் ஒருதலைபட்சமாக செயல்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. காவல் நிலைய ஆணை 126படி, யார் வந்து புகார் சொன்னாலும் வாங்கி CSR நம்பர் கொடுக்கணும். இதுவே சட்டம் கூறுகிறது. ஆகையால், அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்களுக்கு பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைக்கிறார்கள்.

தலைமை நிருபர்: J.ஜெயவேல்முருகன், கன்னியாகுமரி.




செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:
editorpoliceparvai@gmail.com
செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 9789491438

# ஜப்பான் மண்ணில் கொடி நாட்டிய பாரதம்

## 24 மணி நேரமும் ஓடி உலகையே மிரள வைத்த இந்திய வீரர்கள்..

## ஹாட்ரிக் தங்கம் வென்று வரலாற்றுச் சாதனை..



ஜப்பானின் ஹிரோசாகி நகரில் நடைபெற்ற புகழ்பெற்ற சர்வதேச அளவிலான ஆசியா – ஓசியானியா 24 மணி நேர ஓட்டப்பந்தயத்தில் (IAU 24-Hour Asia & Oceania Championship) இந்திய தடகள அணி உலகமே வியக்கும் வண்ணம் ஒரு பிரம்மாண்ட வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது.

ஆண்களுக்கான தனிநபர் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் தட்டிச் சென்று ஒட்டுமொத்தப் பதக்கங்களையும் அள்ளியதோடு மட்டுமல்லாமல், அணி ரீதியாகவும் அசத்தலாகத் தங்கம் வென்று ஆசிய அளவில் இந்தியா தனது அசைக்க முடியாத ஆதிக்கத்தை தற்பொழுது நிலைநாட்டியுள்ளது.

இந்திய தடகள சம்மேளனத்தின் (AFI) முழுமையான வழிகாட்டுதலின் கீழ் பங்கேற்ற இந்திய அணி, கடந்த மே 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் ஜப்பானில் நடைபெற்ற இந்தப் போட்டியில் மிக ஆக்ரோஷமாகப் பங்கேற்று இந்த அரிய சாதனையை நிகழ்த்திக் காட்டியுள்ளது.

ஏற்கனவே கடந்த 2022 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சர்வதேச ஓட்டப்பந்தயங்களில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய தடகள அணி, தற்பொழுது நடப்பு 2026-ஆம் ஆண்டிலும் சாம்பியன் பட்டம் வென்று ஆசிய அளவில் ஒரு மாபெரும் ஹாட்ரிக் சாதனை படைத்து அசத்தியுள்ளது.

24 மணி நேரத்தில் 282 கி.மீ. அமர் சிங் தேவாண்டா படைத்த புதிய தேசிய சாதனை படைத்தார். ஆண்களுக்கான தனிநபர் ஓட்டப்பந்தயப் பிரிவில் அசாத்திய திறமையை வெளிப்படுத்திய இந்திய வீரர் அமர் சிங் தேவாண்டா, இடைவிடாமல் 24 மணி நேரத்தில் 282.881 கி.மீ. தூரம் ஓடி புதிய தேசிய சாதனையுடன் இந்தியாவின் தங்கப் பதக்கத்தை உறுதி செய்தார்.

அமர் சிங் தேவாண்டா தற்பொழுது படைத்துள்ள இந்த இமாலய ஓட்டச் சாதனை, ஒட்டுமொத்த ஆசிய சாதனையை வெறும் 3 கி.மீ. என்ற மிகச் சிறிய வித்தியாசத்தில் தவறவிட்டாலும், நடப்பு 2026-ம் ஆண்டில் உலக அளவில் பதிவு செய்யப்பட்ட சிறந்த தூரமாகக் கருதப்படுகிறது.

### முக்கிய சாதனைகள் மற்றும் புள்ளிவிவரங்கள்

**ஆண்கள் தனிநபர் பிரிவு**

தங்கம்: அமர் சிங் தேவாண்டா – 282.881 கி.மீ. (226 சுற்றுகள் – புதிய தேசிய சாதனை)
வெள்ளி: ஜினோ ஆண்டனி – 272.894 கி.மீ. (218 சுற்றுகள்)
வெண்கலம்: சௌரவ் குமார் ரஞ்சன் – 260.058 கி.மீ. (208 சுற்றுகள்)

**ஆண்கள் அணி பிரிவு**

முதலிடம்: இந்தியா – 815.833 கி.மீ. (தங்கம் – ஆசிய சாதனையை முறியடித்தது)
இரண்டாமிடம்: 754.726 கி.மீ. (வெள்ளி)
மூன்றாமிடம்: ஆஸ்திரேலியா – 732.525கி.மீ. (வெண்கலம்)

**பெண்கள் அணி பிரிவு**

முதலிடம்: ஜப்பான் – 707.357 கி.மீ. (தங்கம்)
இரண்டாமிடம்: ஆஸ்திரேலியா – 684.450 கி.மீ. (வெள்ளி)
மூன்றாமிடம்: இந்தியா – 667.722 கி.மீ. (வெண்கலம்)

அமர் சிங்கைத் தொடர்ந்து இந்திய தடகள வீரர்கள் ஜினோ ஆண்டனி வெள்ளிப் பதக்கத்தையும், சௌரவ் குமார் ரஞ்சன் வெண்கலப் பதக்கத்தையும் வென்று, ஒட்டுமொத்தமாகத் தனிநபர் பிரிவின் அனைத்துப் பதக்கங்களையும் இந்தியாவிற்கு மட்டுமே சொந்தமாக்கி சாதனை படைத்தனர்.

ஆண்கள் அணி பிரிவில் இந்தியா ஒட்டுமொத்தமாக 815.833 கி.மீ. தூரத்தைக் கடந்து ஆசிய அளவில் ஒரு புதிய மெகா சாதனையைப் பதிவு செய்துள்ளது. இது ஐஏயு (IAU) சாம்பியன்ஷிப் வரலாற்றில் எந்தவொரு ஆசிய நாடும் இதுவரை எட்டாத உச்சபட்ச தூரமாகும்.

**வெண்கலம் வென்ற இந்திய பெண்கள் அணி; பயிற்சியாளர் நெகிழ்ச்சி!**

பெண்கள் பிரிவில் இந்திய வீராங்கனை டென்சின் டோல்மா 228.939 கி.மீ. தூரம் ஓடி புதிய தேசிய சாதனையுடன் சர்வதேச அளவில் நான்காவது இடத்தைப் பிடித்தார். மேலும், இந்திய பெண்கள் அணி ஒட்டுமொத்தமாக வெண்கலப் பதக்கம் வென்று இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தது.

இப்போட்டியில் பங்கேற்ற 11 இந்திய வீரர்களில் 8 பேர் தங்களது வாழ்நாளில் மிகச் சிறந்த ஆட்டத்தை (Personal Best) பதிவு செய்துள்ளனர். ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் 12 மணி நேரம் மற்றும் 24 மணி நேர ஓட்டத்தில் புதிய தேசிய சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மெகா வெற்றி குறித்து இந்திய தடகள அணியின் தலைமை பயிற்சியாளர் சந்தோஷ் பத்மநாபன் கூறுகையில், "இந்த உன்னதமான தருணத்திற்காக நாங்கள் ஒட்டுமொத்த நாடும் பெருமைப்படுகிறோம். இது இந்திய அல்ட்ரா ரன்னிங் சமூகத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

வீரர்களின் அயராத கடின உழைப்பு மட்டுமின்றி, இதில் பங்காற்றிய பயிற்சியாளர்கள், பிசியோதெரபிஸ்ட்கள் மற்றும் விளையாட்டு ஊட்டச்சத்து நிபுணர்களின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த உன்னதமான பலன் இது" என்று நெகிழ்ச்சியுடன் தற்பொழுது பகிர்ந்துள்ளார்.

# உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக திருமதி.வெங்கிட சுப்பிரமணி மோகனா அவர்கள்

## தமிழகம் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்த முதல்வர் விஜய்

மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர் திருமதி.வெங்கிட சுப்பிரமணி மோகனா அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

உச்ச நீதிமன்ற வரலாற்றில், மூத்த வழக்கறிஞராகப் பணியாற்றி நேரடியாக உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படும் 2–வது பெண் என்ற பெருமையையும், தமிழ்நாட்டைச் சேர்ந்த முதல் பெண் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.

திருமதி.வெங்கிட சுப்பிரமணி மோகனா அவர்களின் நியமனம் பெண் கல்வி முன்னேற்றத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உந்து சக்தியாகத் திகழும்.

மாண்பமை உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றிருக்கும் அவர்களுக்கு என் சார்பிலும், தமிழ்நாடு அரசின் சார்பிலும், தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என முதல்வர் ச.ஜோசப் விஜய் வலைதளம் மூலம் தெரிவித்துள்ளார்.







# செல்வம்

**கஷ்டப்பட்டு தேடப்படுகிறது..**
**கவலையுடன் பாதுகாக்கப்படுகிறது..**
**துக்கத்துடன் இழக்கப்படுகிறது..**

**ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்**





## தேசிய மகளிர் மாஸ்டர் தடகளப் போட்டியில் பதக்கங்கள் வென்ற

# திருமதி. கீதா, திருமதி. கிருஷ்ணரேகா ஆகியோருக்கு SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள் பாராட்டு

மூன்றாவது தேசிய மகளிர் மாஸ்டர் தடகள சாம்பியன்ஷிப் 2026 போட்டி கோவாவில் நடைபெற்றது. இதில் (முதல் 35 வயது பிரிவு) போட்டிகளில் கன்னியாகுமரி மாவட்டம் நேசமணி நகர் காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் உதவி ஆய்வாளர் திருமதி. கீதா அவர்கள் 4x400 மீட்டர் தொடர் ஓட்ட பந்தயத்தில் தங்கப் பதக்கம், 800 மீட்டர் ஓட்டப்பந்தயம் மற்றும் ஹாமர் த்ரோ (Hammer Throw) போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்கள் வென்றுள்ளார்.

(40 முதல் 45 வயது பிரிவு) போட்டிகளில் மணவாளகுறிச்சி காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் தலைமை காவலர் திருமதி.கிருஷ்ண ரேகா அவர்கள் உயரம் தாண்டுதல் (High Jump), மும்முறை தாண்டுதல் (Triple Jump) மற்றும் 80 மீட்டர் தடை தாண்டும் ஓட்டம் ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு மூன்று தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

மேற்படி உதவி ஆய்வாளர் திருமதி. கீதா மற்றும் தலைமை காவலர் திருமதி. கிருஷ்ணரேகா அவர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள் மாவட்ட காவல் அலுவலகம் வரவழைத்து நேரில் பாராட்டி வாழ்த்தினார்.

தலைமை நிருபர்: J.ஜெயவேல்முருகன், கன்னியாகுமரி.



# சாலையில் கிடந்த ரூ.5.64 லட்சத்தை ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுனர் மதன்

## துணை ஆணையர் திருமதி. தீபா சத்யன் IPS அவர்கள் பாராட்டு

சாலையில் கிடந்த ரூ.5.64 லட்சம் பணத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுநருக்கு போலீசார் பாராட்டு தெரிவித்தனர்.

திருப்பூர் விஜயாபுரம் பகுதியைச் சேர்ந்தவர் மதன். இவர் அப்பகுதியில் ஆட்டோ ஓட்டி வருகிறார். இன்று காலை தனது உறவினர் ஒருவரை அழைத்துக் கொண்டு ஆட்டோவில் சென்றுள்ளார்.

அப்போதும் வளம் பாலம் அருகே சாலையில் பிங்க் நிறை பை ஒன்று இருப்பதை கண்டார். உடனடியாக ஆட்டோவை நிறுத்திய அவர், அந்த பையை திறந்து பார்த்துள்ளார். அந்த பை முழுவதும் கட்டுக்கட்டாக பணம் இருந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து உடனடியாக திருப்பூர் தெற்கு காவல் நிலையம் சென்ற மதன் ஆய்வாளர் கணேஷ் குமாரிடம் அந்த பணப்பையை ஒப்படைத்தார். பையினை சோதனை செய்ததில் அதில் ரூ.5,64,000 பணம் இருந்தது தெரிய வந்தது.

இதனிடையே, ராஜஸ்தானை சேர்ந்த தானாராம் என்பவர் இன்று காலை தனது இரும்பு கடையில் இருந்து வங்கியில் செலுத்த எடுத்து சென்ற ரூ.5.64 லட்சம் பணம் சாலையில் செல்லும் போது கீழே விழுந்துவிட்டதாக திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து பையில் இருந்த அடையாளங்கள் மற்றும் பணம் உறுதி செய்யப்பட்ட பின்னர் தானாராமிடம் பணம் ஒப்படைக்கப்பட்டது.

சாலையில் கிடந்த பணத்தை பத்திரமாக காவல் நிலையத்தில் ஒப்படைத்த மதனை நேரில் அழைத்து, துணை ஆணையர் திருமதி. தீபா சத்யன் IPS அவர்கள் மற்றும் உதவி ஆணையர் ஜான் உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகள் பாராட்டினர்.

மேலும் ஒவ்வொரு குடிமகனும் இதே போல பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் எனவும் போலீசார் அறிவுறுத்தினர்.

தலைமை நிருபர்: A.மாரிராஜா, திருப்பூர்.




தென்காசி மாவட்டம் புளியங்குடி பகுதியில்

# பள்ளி,கல்லூரி மாணவர்களை குறிவைத்து புகையிலை பொருட்கள் விற்றவர் கைது

தென்காசி மாவட்டம் புளியங்குடி பகுதியில் பள்ளி கல்லூரி மாணவர்களை குறி வைத்து தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வதாக புளியங்குடி போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் புளியங்குடி SI பவுல்ராஜ், தலைமைகாவலர் ராமசாமி, ராஜா, ரமேஷ், சரவணன் ஆகிய காவல்குழுவினர் புளியங்குடி பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த இருசக்கர வாகனத்தை மடக்கிப்பிடித்து சோதனையிட்டனர்.

அப்போது அந்த இருசக்கர வாகனத்தில் தடை செய்யப்பட்ட புகையிலை பாக்கெட்டுகள் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்த போலீசார் அது குறித்து விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது புளியங்குடி பகுதியை சேர்ந்த சீதாராமன் மகன் முனியசாமி (29) என்பவரும் இவர் இதே பகுதியில் பெட்டி கடை நடத்தி வருவதும் தெரியவந்தது.

இந்நிலையில் இவர் வடமாநிலத்தை சேர்ந்தவர்களிடம் இருந்து தமிழக அரசால் தடைசெய் புகையில் பொருட்களை வாங்கி பள்ளி, கல்லூரி மற்றும் வாகன ஓட்டுநர்கள் குறிவைத்து விற்பனை செய்து வந்ததும் தெரியவந்தது.

இதனை அடுத்து விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த சுமார் 17 கிலோ மதிப்பிலான புகையிலை பொருட்கள் மற்றும் 11,500 ரூபாய் பணம் புகையிலை விற்பனைக்காக பயன்படுத்திய இரு சக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்த போலீசார் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

தொடர்ந்து பள்ளி, கல்லூரி மாணவர்களை குறி வைத்து தடை செய்யப்பட்ட புகையிலை விற்பனை செய்த சம்பவம் இந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

சட்ட ஆலோசகர்: K.அருணாச்சலம்



*தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் (DGP) திரு.மகேஷ் குமார் அகர்வால் IPS அவர்களின் உத்தரவின்படி, தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP) திரு.அசோக்குமார், அவர்களின் தலைமையில் மாவட்ட காவல்துறையினர், தென்காசி மாவட்டத்தின், அனைத்து காவல் நிலைய பகுதிகளிலும் மக்களைத் தேடி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் தீவிர நடை ரோந்து பணியில் ஈடுபட்டனர்.*

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி

# தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில் சிசிடிவி கேமரா கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறை

## SP Dr.B.சினேஹா ப்ரியா IPS அவர்கள் திறந்து வைத்தார்

தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன சிசிடிவி கேமரா குற்றச் சம்பவ கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹா ப்ரியா IPS அவர்கள் திறந்து வைத்தார்.

தனியார் நிறுவனத்துடன் இணைந்து மாவட்ட காவல்துறை தேனி மாவட்டம் முழுவதும் மொத்தம் 450 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப் படஉள்ளது, அதில் முதற்கட்டமாக தற்போது 60 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

இக்கேமராக்கள் மூலம் முக்கிய சாலைகள், மக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் முக்கிய சந்திப்புகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்த நவீன கண்காணிப்பு அமைப்பு மூலம் குற்றத் தடுப்பு மற்றும் குற்றவாளிகளை கண்டறிவதுடன், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் முக்கிய பங்காற்றும்.

நிருபர்: V.வேல்முருகன், தேனி.











# கிராம நத்தம் நிலத்தை ஆக்கிரமித்து சொந்தம் கொண்டாட முடியாது

## சென்னை உயர் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

கிராம நத்தம் நிலத்தை யாரும் ஆக்கிரமித்து சொந்தம் கொண்டாட முடியாது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கிராம நத்தம் நிலத்தில் ஆக்கிரமித்து வணிக நிறுவனம் நடத்தி வந்த நபரின் மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தீர்ப்பில், "கிராம நத்தம் நிலம் என்பது யார் வேண்டுமானாலும் ஆக்கிரமித்து உரிமை கோரக்கூடிய நிலம் அல்ல. அந்த நிலங்களை ஒழுங்குபடுத்தவும், பொதுநலன் கருதி பயன்படுத்தவும் அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது"என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும், நிலமற்ற மற்றும் வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காகவே கிராம நத்தம் நிலங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், அரசியல் அல்லது அதிகார பலம் கொண்டு ஆக்கிரமிப்பவர்களுக்கு அவை சொந்தமாக மாற முடியாது என்றும் நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது. கிராம நத்தம் நிலங்களில் வணிக நிறுவனங்கள் அமைப்பதும் அனுமதிக்கப்படாதது என நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தீர்ப்பு, தமிழகம் முழுவதும் கிராம நத்தம் நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருப்போர் மற்றும் நில உரிமை தொடர்பான வழக்குகளுக்கு முக்கிய முன்னுதாரணமாக கருதப்படுகிறது.

தகவல்: குரு.சரவணன், திண்டுக்கல்.

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**



EMPIRE
DailyGlow
Premium Herbal Capsule
NATURALLY SAFE PROVEN RESULTS
100% Natural
ZERO SIDE EFFECTS
ஜிங்கோ பிலாபா | அவகேடோ | சிவப்புகாளான் | கொடம்புளி | மாங்குஸ்தான் | ரேஸ்பெரி
பிளாக்கரண்ட் | செர்ரி | நெல்லிக்காய் | முருங்கை | முஸ்லி | மக்காவேர் | அஸ்வகந்தா | சைபீரியன்
ஜின்செங் | தண்ணீர்விட்டான் கிழங்கு | பூனைக்காலி விதை | திப்பிலி
அமிர்தவள்ளி | மூக்கிரட்டை | சிறுநெருஞ்சி |
Magic of 20 Fruit&Herbs
DailyGlow
Glow Skin | Healthy Hair | Anti Ageing
More Vitality | De'Stress
GLUTEN FREE
NON GMO
NATURAL
90 CAPSULES
•DIETARY FOOD SUPPLEMENT
முகபொழிவை தருகிறது
தோல் ஆரோக்கியத்தை காக்கிறது
முன் முதுமைதோற்றத்தை தடுக்கிறது
முடி ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது
நெகத்தை பாதுகாக்கிறது
மனஅழுத்தத்தை குறைக்கிறது
உற்சாகத்தை அளிக்கிறது
90 CAPSULE | MRP Rs.1800/-
EMPIRE
together to grow!
ஸ்டோன் மாத்திரை
NO SIDE EFFECT
60 TAB
Rs.570/-
Ayurveda CARE
சிறுநீரக கற்களை கறைக்க உதவுகிறது
மீண்டும் கற்களை வரமால் தடுக்கிறது
சிறுநீரக செயல்பாட்டையும் ஊக்குவிக்கிறது
எரிச்சல்&நீர்கடுப்பை சரிசெய்கிறது
சிறுநீரக வீக்கத்தை குறைக்கிறது
EMPIRE
Stone Crush
60 Tablet
An Ayurvedic Preparation
Net wt. 750mg
மூக்கரட்டை
பாதாம் பிசின்
சிறுகண்பீலை
சிலாசித்து
நெருஞ்சில்
2 ஆயூர்வேத பற்பம்
கொள்ளு
நாயூருவி
www.empirebizcorp.com
உங்கள் இல்லத்திலிருந்தே எங்களது தயாரிப்புகளை பெறலாம்.
97 89 49 1438 | 766 755 1542

Posted at - patrikachannel Egmore  Date of publication Everymonth 1st week.
POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520


# அரவணைக்கும் அரண்மனை அறக்கட்டளை

அறமும் அன்பும் இரு கண்கள்

**ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு முற்றிலும் இலவச சேவை**




**AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU**

Affiliated to :

**AEROSKATOBALL FEDERATION OF INDIA**

No.30/2, Shagayamatha Kovil Street,
Malaiadivaram, Ponmalai, Trichy-4

FIT INDIA

Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846


4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO